

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநிலத் தலைவர்

# தோழர் கே. விஜயன்

## பணிஓய்வு - பாராட்டு விழா

மின்வாரிய பணியிலிருந்து ஓய்வு பெற்ற தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநிலத்தலைவர் தோழர் கே. விஜயன் அவர்களின் பணிஓய்வு பாராட்டு விழா 6.7.2012 அன்று மாலை சென்னை அண்ணாசாலை, வி.ஜி.பி. மாளிகையில் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்த தோழர்களை மத்திய அமைப்பின் மாநிலத் துணைத்தலைவர் தோழர் ஜி. மோகன்ராஜ் வரவேற்று பேசினார். தோழர் கே. விஜயன் அவர்களின் மின்வாரிய தொழிற் சங்க பணியை பாராட்டி சிஐடியு தமிழ்மாநிலக்குழுவின் தலைவர் தோழர் ஆர். சிங்காரவேலு, பொதுச் செயலாளர் தோழர் ஏ. சவுந்தரராஜன், எம்.எல்.ஏ., தென்சென்னை சிஐடியு மாவட்டச்செயலாளர் தோழர் எஸ். அப்பனு, சங்கத்தின் மாநில பொருளாளர் தோழர் து. கோவிந்தராஜு, துணைப் பொதுச் செயலாளர்கள் தோழர் பி. கண்ணன், தோழர் ஈ. அந்தோணி, தோழர் எம். வெங்கடேசன், மத்திய அமைப்பின் முன்னாள் பொருளாளர் தோழர் வெ. ராஜசேகரன், சென்னை தெற்கு மண்டல செயலாளர் தோழர் கே. ரவிச்சந்திரன், வடக்கு மண்டலச் செயலாளர் தோழர் தி. ஜெய்சங்கர், உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் அமைப்பாளர் தோழர் எம். தனலட்சுமி மற்றும் சென்னை மண்டலத்திற்குட்பட்ட அனைத்து கிளைச் செயலாளர்களும் பேசினார்கள்.

விழாவில் பேசிய சிஐடியு மாநிலக்குழு தலைவர் தோழர் ஆர். சிங்காரவேலு அவர்கள் சேலத்தில் தோழர் கே. விஜயன் அவர்களோடு ஆரம்ப காலத்தில் ஆற்றிய சங்கப் பணி பற்றியும் சந்தித்த சவால்களை பற்றியும் நினைவு கூர்ந்து வாழ்த்தி பேசினார்.

பொதுச் செயலாளர் தோழர் அ. சவுந்திரராஜன் அவர்கள் பள்ளி காலத்தில் அரைக்கால் சட்டையோடு சந்தித்த முதல் சந்திப்பிலிருந்து இன்று வரையிலான தோழர் கே. விஜயனோடு உள்ள தொடர்புகளையும் தொழிற்சங்கம் கட்டுவதற்கு மின்வாரியம், தமிழ்நாடு கனிமவளம், பெட்ரோலியம் ஆகிய துறைகளில் அவரது இடையறாத பங்குகளை பற்றியும் விதந்து பேசினார். மேலும் எஞ்சிய காலத்திற்கும் அவரது சேவை தமிழக தொழிலாளி வர்க்கத்திற்கு தேவைப்படும் வகையில் அவரை பயன்படுத்த வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் தெரிவித்து வாழ்த்தி பேசினார்.

சென்னை கிளைகளின் சார்பிலும் விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் சிவகங்கை ஆகிய கிளைகளின் சார்பில் தோழர் கே. விஜயன் அவர்களுக்கு நினைவு கேடயமும், பொன்னாடைகளும், பரிசு புத்தகங்களும் வழங்கப்பட்டன. வழக்கறிஞர்கள் திரு. அஜய்கோஷ், திரு. முத்துப்பாண்டி மற்றும் திரு. மனோகரன் ஆகியோர் சார்பிலும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

ஏற்புரை வழங்கிய தோழர் கே. விஜயன் அவர்கள் எஞ்சிய இறுதி காலம் வரை சாக்ரட்டீஸ் தனது இறுதி காலத்தில் பீத்தேவன் இசையை கற்றுக் கொள்ள ஆசைப்பட்டது போல தானும் இன்னும் கற்றுக் கொண்டு தொழிலாளி வர்க்கத்திற்கு பாடுபட போவதாக தெரிவித்தார்.

மேலும் வெண்மணி நினைவாலயம் கட்டுமான பணிக்காக ஏற்கனவே தான் வழங்கிய ரூ. 9,000த்தோடு மேலும் கூடுதலாக ரூ. 5,000மும், உழைக்கும் மக்களின் போர்வாளான தீக்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 5000-மும் நன்கொடையாக வழங்கினார்.

தோழர் ஏ. பழனி நன்றியுரை கூற விழா இனிதே நிறைவு பெற்றது. விழாவிற்கு தோழர் கே. விஜயன் அவர்களின் உறவினர் உட்பட சென்னை மண்டலத்திற்குட்பட்ட அனைத்து கிளைகளிலிருந்து பெருவாரியான தோழர்கள் கலந்து கொண்டனர்.

தொகுப்பு : **து. கோவிந்தராஜு**

மின்கதிர்
COTEE

தமிழ்நாடு மின்ஊழியர்
மத்திய அமைப்பின்
மாதஇதழ்
விலை ரூ. 5/-
ஆகஸ்ட் 2012


உள்ளே........


- மனித உழைப்பு சக்தியும் மின்சார வாரியமும்
- மின்வாரிய பிரிப்பால் பலனடைந்தவர்கள்
- அனல் மின் நிலையங்களில் தொடரும் விபத்துக்கள்
- உழைப்பு சுரண்டலும் மின்வாரிய அதிகாரிகளும்
- உணவுப் பாதுகாப்பு
- ரூ.120/- பெறுவோர்க்கு வருங்கால வைப்பு நிதி
- பெண்/வரமா?சாபமா?
- ஐடிஐ படித்தவர்கள் 4000 பேர் நியமனம்
- புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் - நமது ஆலோசனைகள்
- தனியார் அனல் மின்நிலைய ஊழியர்களுக்கு மாதம் ரூ. 2000/- ஊதிய உயர்வு



ஆசிரியர் குழு
எஸ்.எஸ். சுப்பிரமணியன்
(ஆசிரியர்)
கே. விஜயன்
து. கோவிந்தராஜு
எம்.வெங்கடேசன்
டி. அறிவழகன்
கோ. மோகன்ராஜ்
எம். தனலட்மி

ஆண்டு சந்தா ரூ. 50/-
ஆயுள் சந்தா ரூ. 500/-
தனிப்பிரிதி ரூ. 5/-

முகவரி
27, மருதிதெரு,
சேப்பாக்கம்,சென்னை 5.





தமிழகத்தில் மின் நுகர்வோர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருகிறது. உயர்ந்து வரும் மின் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப மின் உற்பத்தியை கூடுதலாக்க வேண்டியுள்ளது. உற்பத்தி செய்யும் மின்சாரத்தை மின்பாதை வழியாக கொண்டு செல்லல், அதை மின் நுகர்வோர்களுக்கு விநியோகிப்பது என்ற மகத்தான் பணியை ஆற்ற வேண்டியுள்ளது. வளர்ந்து வரும் மின்நுகர்வோர்களின் தேவையான மனித உழைப்பு சக்தி இல்லாத நிலையே நீடிக்கின்றது.

தேவைக்கேற்ப மனித சக்தி தமிழக மின் வாரியத்தில் இல்லாத காரணத்தினாலேயே மின் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப சேவையை அளிக்கமுடியவில்லை. தேவைக்கேற்ப மனித சக்தி இல்லாத காரணத்தினால்தான் மின் உற்பத்தி நிலையங்களில் தீ விபத்தும், இயந்திரங்கள் பழுதாவதும் தொடர்கதையாக நடந்து கொண்டு வருகிறது. அனல் மின் நிலையங்களின் ஏற்படுகின்ற தீ விபத்துக்களை தீ பற்ற ஆரம்பித்த உடனே அதை பார்த்து தீயை அணைப்பதற்கு கூட ஆள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதைப் போலவே இயந்திரங்களில் பழுதுகள் ஏற்படும் பொழுது அந்த பழுதுகளை சரி செய்து மின் உற்பத்தியை காலதாமதமின்றி துவங்குவதற்கு கூட ஆள் பற்றாக்குறை உள்ளது.

ஆட்பற்றாகுறை என்பது உற்பத்தி பிரிவுகளை மட்டும் பாதிக்கும் ஒன்றாக இல்லை. உற்பத்தி செய்த மின்சாரத்தை கொண்டு செல்ல பாதை அமைத்தல், பராமரித்தல், மின்சாரத்தை விநியோகிப்பதிலும் ஆள்பற்றாக்குறையினால் முறையாக செய்திட முடியவில்லை. புதிய மின் நிலையங்கள் அமைப்பதில் தமிழ்நாடு மின்சார வாரியமும், சில மத்திய, மாநில பொதுத் துறை நிறுவனங்களும் இணைந்து புதிய மின் நிலையங்களை அமைக்கும் பணியை செய்து வருகின்றனர்.

குறிப்பாக வட சென்னை அனல் மின் நிலையத்தின் விரிவாக்கமாக 600 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. அந்த மின் நிலையம் தமிழ்நாடு மின்சார வாரியமும், பாரத் மிகு மின் நிறுவமும் இணைந்து அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மின் நிலையத்தின் கட்டுமான பணி பாரத் மிகு மின் நிறுவனம் செய்வதாக ஏற்றுக் கொண்டு அதை அவர்கள் நேரடியாகச் செய்யாமல் பல துணை ஒப்பந்தக்காரர்களைக்

கொண்டு செய்து வரும் ஏற்பாட்டால் தான் இந்த மின் உற்பத்தி நிலையத்தின் பணி எப்போது தான் முடியுமென்று சொல்லமுடியாத அவல நிலை நிலவுகிறது. பாரத் மிகு மின் நிறுவனத்திடம் உற்பத்திச் சாதனங்களை பெற்று மின் வாரிய ஊழியர்களே மின் நிலையம் அமைக்கும் பணியை ஏற்று நடத்தி இருந்தால் மின் நிலையம் அமைக்கும் பணி எப்போதோ முடிந்து, மின் உற்பத்தி தொடங்கி இருக்கும் மின் பற்றாக்குறையை போக்க மிக உதவிகரமாய் இருந்திருக்கும்.

மின் வாரியம் பல கோடி ரூபாய் செலவில் 400 கே.வி / 230 கே.வி. / 110 கே.வி. துணை மின் நிலையங்களை அமைக்கின்றது. நவீனக் கருவிகள் அம்மின் நிலைகங்களில் பொருத்தப்பட்டுள்ளது. ஆனால் அம்மின்நிலையங்களை பராமரிப்பதற்கு தேவையான பொறியாளர்களையும், தொழிலாளர்களையும் நியமிக்காமல் அவுட் சோர்சிங் மூலமாக பல கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மின் நிலையங்களை பராமரிக்கும் பணிகளை செய்ய முயற்சிப்பது சரிதானா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

மின் வாரிய செயல்பாட்டின் இரத்த நாளங்களாக உள்ள களப்பிரிவு ஊழியர்களின் பணியிடங்கள் பல்லாயிரக்கணக்கில் காலியாக கிடக்கின்றன. அதைப்போல மின் வாரிய வருவாயின் ஊற்றுக்கண்ணாக விளங்கும் கணக்கீட்டுப்பிரிவில் பல நூறு பதவிகள் காலியாக இருப்பதானல் மின் எரிப்பு கணக்கீடு முறைப்படுத்த முடியாததோடு, விற்ற மின்சாரத்திற்கு மின் கட்டணத்தை வசூலிப்பதிலும் பெரும் குறை ஏற்பட்டு பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுகின்றது.

இவைகளின் பின்னணியில் தான் மின் வாரியத்தில் காலி உள்ள 50,000 க்கும் மேற்பட்ட பதவிகளை நிரப்பிட வேண்டுமென்று அரசையும், வாரியத்தையும் மின் ஊழியர் மத்திய அமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதன் பயனாக சமீபத்தில் 4000 ஐடிஐ படித்தவர்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமிப்பதற்கு தமிழக அரசு ஆணையையும் வெளியிட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் மின் வாரியத்தில் காலியாக உள்ள பொறியாளர் பணியிடங்களை நிரப்புகின்ற விதமாக 600 உதவிப் பொறியாளர்களை நேரடி நியமனம் மூலம் நியமிப்பது என்று முடிவெடுத்து அதையும் அமல்படுத்தியுள்ளது. மேலும் மின்வாரியத்தில் பணியாற்றும் நிரந்தரப்படுத்தப்பட்ட பட்டியலில் விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கையையும், மின் ஊழியர் மத்திய அமைப்பின் வற்புறுத்தலின் அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்களை முறைப்படுத்தும் விதமாக மத்திய அமைப்பு வழக்கில் பட்டியலிடப்பட்ட4631 ஒப்பந்த தொழிலாளர்களின் ஒரு பகுதியினரையும், ரூ.120ஐ தினக்கூலியாக பெற்று வரும் தொழிலாளிகளையும் பட்டியலிட்டு அவர்களை வாரிய தொழிலாளியாக மாற்றுவதற்குண்டன நடவடிக்கையும் வாரியம் எடுத்து வருகிறது. மேலும் மத்திய அமைப்பால் தொடுக்கப்பட்ட வழக்கில் இடம் பெற்றுள்ளவர்களை முழுமையாக பணியில் அமர்த்தி நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்கொள்ளுவதற்குண்டான தயாரிப்பு பணிகளில் வாரியம் ஈடுபட்டு வருகிறது.

மின் வாரியத்தில் ஐ.டி.ஐ. படித்தவர்களை பி.இ. படித்தவர்களை மின்வாரிய பணியில் நியமிப்பது, ஒப்பந்த தொழிலாளிகளை பணி நிரந்தரம் செய்து களப்பிரிவில் உள்ள காலி இடங்களை குறைப்பதற்குண்டான நடவடிக்கையை எடுத்திருப்பது. அனைத்துமே மின் ஊழியர் மத்திய அமைப்பு மின் வாரியத்தில் உள்ள காலி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டுமென்று வலியுறுத்தி போராடியதன் விளைவேயாகும் அரசினுடைய இந்த நடவடிக்கையாக இருந்தாலும் மின் வாரியத்தில் காலிப் பணி இடங்களை நிரப்புவதற்குண்டான நடவடிக்கையை எடுத்திருப்பதற்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு தனது வாழ்த்துக்களை உரித்தாக்குகிறது.

தமிழக அரசும், மின்வாரியமும் காலிப் பணியிடங்களை நிரப்பிட சிறு முயற்சி எடுத்திருந்தாலும் இன்னும் நூற்றுக்கணக்கில் களப்பிரிவில், கணக்கீட்டுப்பிரிவில், வருவாய்ப்பிரிவில், தணிக்கைப்பிரிவில், காலி பணி இடங்களை நிரப்பி வாரிய பணிகளை முறைப்படுத்துவதின் மூலம்தான் மக்கள் சேவையை தொடர்ந்திட முடியும். அந்த அடிப்படையில் மீதமுள்ள காலி பணி இடங்களை நிரப்பிட வேண்டும், பணிகளை முறைப்படுத்திட வேண்டும், மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டுமென மின் ஊழியர் மத்திய அமைப்பு அரசை வேண்டிக் கொள்கிறது.

- எஸ். எஸ். சுப்பிரமணியன்



# மின்வாரிய பிரிப்பால் பலனடைந்தவர்கள்

தமிழகத்தில் கட்டுமானத்தில் உள்ள மின் நிலையங்கள் என்றைக்கு மின் உற்பத்திக்கு வரும் என்றும், எதிர்பார்த்துக் கொண்டு இருக்கும் மின் நிலையங்கள் எப்பொழுது வரும் என்றும் அனைவரும் எதிர்பார்க்கின்றார்கள். ஆட்சியாளர்களும் இதோ வந்து விடும், வந்து விட்டால் மின் தட்டுப்பாடு ஓரளவு தீரும் என்று ஆரூடம் சொல்லிக் கொண்டு வருகின்றார்கள்.

வடசென்னையில் இரண்டு 600 மெகாவாட் திறன் உள்ள அனல் மின் நிலையங்கள் அமைக்கப் பட்டு, செப்டம்பர் 2011-ல் ஒரு மின் நிலையம் உற்பத்தியை துவங்கும். அடுத்த மின் நிலையம் டிசம்பர் 2012 -ல் துவங்கும் என்றும் கூறப்பட்டது.

இந்த மின் நிலையங்களை கட்டி முடித்து ஒப்படைக்க வேண்டிய பணியை பிஎச்இஎல் நிறுவனம் தான் செய்கின்றது. பல மாநிலங்களில் இந்நிறுவனம் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாகவே முடித்துள்ளதாக செய்திகளை பார்க்கின்றோம்.

சமீபத்தில் கூட நெய்வேலியில் 250 மெகாவாட் திறன் கொண்ட மின்சார நிலையம், குறித்த காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டு உற்பத்தி துவங்கிவிட்டது.

600 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் நிலையத்தை பிஜிஆர் எலக்ட்ரிக் கம்பெனி கட்டி முடித்து ஒப்படைக்க வேண்டிய காலம் செப்டம்பர் 2011-ம் ஆண்டு ஆகும்.

ஆதிமுக கட்சி ஆட்சி பொறுப்பேற்றவுடன் ஜூன் மாதம் 2012-ல் 1800 மெகாவாட் உற்பத்தி கூடுதலாக கிடைக்கும் என்று அறிவிப்பு செய்யப் பட்டது. ஜூலை மாதம் முடிய போகின்றது. இதுவரை யில் மின் உற்பத்தி கூடுவதற்கான எந்தவித தடயமும் இல்லை.

வல்லுனூர் அனல் மின் நிலையத்தில் முதல் 500 மெகாவாட் மின் நிலையம் மின் உற்பத்திக்கு தயாராகவே உள்ளதாக சொல்லப்படுகிறது. ஆனால் மின் உற்பத்திக்கான தடயம் இல்லை.

மக்களின் அவதியை தீர்ப்பதற்கான எந்த ஏற்பாடும் உடனடியாக கண்ணுக்குத் தெரியவில்லை. உடனடித் தீர்வாக தமிழக மின் வாரியம் வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை வாங்குவதற்கு தயார் செய்து கொண்டிருக்கிறது. மக்களின் நலனுக்காக மின்சாரம் வெளியிலிருந்து விலை கொடுத்து வாங்குவது நல்லது என்றாலும், மின் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்ற அனைத்து மின் உற்பத்தியையும் முழுமையாக பயன்படுத்திய பின்னரே பற்றாக்குறை ஏற்படும் மின்சாரத்தை வாங்குவதை தவிர வேறு வழியில்லை, அதனால் மின்சாரம் வெளியில் இருந்து வாங்கப்படுகிறது என்று கூறுவது நியாயமான ஒன்றாகும்.

நீர் மின் நிலையங்கள் (அணைகளில் தண்ணீர் சேமிப்பு இல்லை) தவிர மின் உற்பத்திக்குத் தகுதி இருந்தும் மின் உற்பத்தி செய்யாமல் இருக்கும் மின் நிலையங்களின் மின் உற்பத்தி திறன் மதிப்பு 1700 மெகாவாட் ஆகும்.

மின் உற்பத்தி கொண்டு வருவதற்கு தடையாய் இருப்பது எது? மின்வாரியத்திற்கும் அரசுக்குமே தெரியும், இது ஒரு பக்கம், இரண்டு அனல் மின் நிலையங்கள் குறித்த காலத்தில் மின் உற்பத்தியை துவக்கியிருக்க வேண்டும்.
அவ்வாறு குறித்த காலத்தில் துவக்கவில்லை என்றால் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் 105 கோடி ரூபாயை கட்டு மானத்தை செய்யக்கூடிய நிறுவனங்கள் தண்டத் தொகையாக மின் வாரியத்திற்கு அளித்திட வேண்டும்.

வட சென்னை அனல் மின் நிலையத்தை பிஎச்இஎல் நிறுவனம் கட்டி ஒப்படைக்கவேண்டும். இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டால் ஒழிய இந்த ஒப்பந்தத்தின் விதிகளிலிருந்து விதி விலக்கு பெற முடியாது. இதற்கு தேவையான ஜெனரேட்டர் ஹரித்துவாரிலிருந்து சாலை வழியாக கொண்டு வந்தபொழுது சாலையில் ஆற்றின் குறுக்கே அமைந்த பாலம் ஜெனரேட்டரின் பளுவை தாங்க முடியாத காரணத்தினால் ஆற்றில் விழுந்து விட்டதாக தாமதத்திற்கு காரணத்தை கூறலாம்.

ஜெனரேட்டர் கொண்டுவந்து பொருத்த வேண்டிய பொறுப்பு பிஎச்இஎல் பொறுப்பு ஆகும். மிக பளுவான இயந்திரத்தை கொண்டுவரும் பொழுது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை பின்பற்றியிருந்தால் இந்த தவறு நேர்ந்திருக்க வாய்ப்பில்லை.

எப்படியிருந்தாலும் தாமதத்திற்கு மின் வாரியம் காரணமில்லை. பிஎச்இஎல் ஒரு பொதுத்துறை நிறுவனம், அதற்கு தண்டம் விதிப்பது சரியாக இருக்காது என்று கூறுவதும் நியாயமல்ல.

காயம்குளம் மின் நிலையம் மத்திய அரசிற்கு சொந்தமான மின் நிலையம், அங்கிருந்து தமிழக அரசு விலை கொடுத்து மின்சாரம் வாங்குகின்றது. ஒரு யூனிட் விலை ரூ. 9.30ஆகும். அதே போன்று ரயில் மூலம் நிலக்கரியை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கொண்டு வருவதற்கு ஒரு டன் நிலக்கரிக்கான சரக்கு கட்டணம் 1400 ரூபாய் ஆகும். இதனால் தமிழக மின்வாரியம் செலவுகள் கூடத்தான் செய்கிறது. மத்திய அரசு ஒன்றும் இதைப் பற்றி கவலைப்பட்டதாக இல்லை.

அதே போன்றுதான் பிஜிஆர் எலக்ட்ரிக் கம்பெனி, மேட்டூர் அனல் மின்நிலையம் 600 மின் உற்பத்தி நிலையமும் செப்டம்பர் மாதம் 2011 இல் உற்பத்திக்கு வந்திருக்க வேண்டும். இதுநாள் வரையில் மின் உற்பத்திக்கு வரவில்லை. அக்கம்பெனியும் தமிழக மின் வாரியத்திற்கு மாதம் தோறும் 100 கோடி ரூபாய் என்றளவில் 900 கோடி ரூபாய் தண்டத் தொகை அளித்திருக்க வேண்டும்.

தண்டத்தொகையை ஒப்பந்தப்படி செலுத்த நிர்ப்பந்தித்தால் கட்டுமான வேலைகள் நின்று போய்விடும் என்று வாரியம் அஞ்சுகிறதாம். அரசும் அதை அங்கீகரிக்கிறது. மின்வாரியம் தண்டத்தொகை பற்றி பரிசீலித்து இருந்தால் மக்கள் மீது மலைபோல் குவிக்கப்பட்ட மின் கட்டணத்தை சற்று குறைப்பதற்கு இது உதவியிருக்கும்.

மின் வாரியங்கள் பிரிக்கப்படவேண்டும் என்று மத்திய அரசு முடிவெடுத்த பொழுது அதற்கான காரணமாக சொல்லப்பட்டது மின் நிலையங்கள் உற்பத்தியை அதிகமாக்க. மின்சாரத்தை தரமானதாகவும் தடையின்றியும் 24 மணி நேரமும் மின்கம்பி இழப்பைக் குறைத்து அனைவருக்கும் மின்சாரம் குறைந்த விலையில் வழங்கிட மாநில மின்சார வாரியங்களால் முடியாது, தனியாரையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டது. அரசின் கொள்கைகள் அமல்படுத்தப்பட்டது. மேலே மத்திய அரசினால் சொல்லப்பட்ட ஒன்றே ஒன்று மட்டும் நடந்துள்ளது. முதலாளிகள் மின்துறைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

முதலாளிகள் மின்துறைகளில் அனுமதிக்கப் பட்ட தில்லி மாநிலத்தின் 2002 ஆண்டு முதல் 2012 வரை 10 ஆண்டுகள் அனுபவத்தை ZEE என்ற நிறுவனம் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்ததன் விவரங்களை பார்க்கும்பொழுது அரசு நினைத்தது நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகிறது. முதலாளி களின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது, மக்களுக்கு துன்பமே தொடர்கிறது. மின் விநியோகம் தனியாருக்கு விடப்பட்டுள்ளது.

டாடா மற்றும் ரிலையன்ஸ் கம்பெனிகள்தான் மின்விநியோகம் செய்கின்றன. மின்கட்டணம் ஒரு யூனிட் மின்சாரம் 125 பைசாவிலிருந்து 350 பைசா உயர்ந்துள்ளது. மின்சாரத்தின் தேவை 2879 மெகாவாட்டிலிருந்து 5500 மெகாவாட் வரை உயர்ந்த நிலையில் மின் உற்பத்தி இந்த 10 ஆண்டுகளில் வெறும் 52 மெகாவாட் மட்டும் கூடியுள்ளது. மின்வெட்டு 3 மணி நேரம் என்பது சற்று குறைக்கப் பட்டுள்ளது, மின் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டு குறைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சதவீத மின் திருட்டு குறைப்பால் தனியார் முதலாளிகளுக்கு 90 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து வாங்கும் மின்சாரத்திற்கு அளிக்க வேண்டிய பாக்கித் தொகைகள் ஆயிரத்திற்கு மேற்பட்ட கோடி ரூபாய் உள்ளது. ஆக தனியாருக்கு தில்லி மின் வாரியத்தை ஒப்படைத்தன் காரணத்தினால் மின் நுகர்வோர் களுக்கு துன்பமே தொடர்கிறது.

மின் விநியோகத்தில் ஈடுபடும் டாடா, ரிலையன்ஸ் முதலாளிகளுக்கு கொள்ளை லாபம் கிடைக்கிறது. ஒடிசா மாநிலத்திற்கு அடுத்த மாநில அனுபவம் இதுதான்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் மின் கட்டணத்தை உயர்த்தும் பொழுது மக்களை சமாதானப்படுத்த சொன்ன வார்த்தைகள், மின்வாரியம் தொடர்ந்து பொதுத்துறையாக நீடிக்க வேண்டுமென்றால் மக்கள் மின் கட்டண உயர்வை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற வார்த்தைகள் ஏமாற்றும் வார்த்தைகளாகப் போகின்றது.

தமிழக முதலமைச்சரின் வார்த்தைகள் உண்மையாக வேண்டுமென்றால் தமிழக மின்வாரியத்தை காப்பாற்றுவதற்கு மத்திய அரசின் மின் கொள்கையை மாற்றுவதற்கு போராடுவது மட்டுமல்ல, தமிழக மின்வாரியத்தை கடனிலிருந்து மீட்பதற்கான 50 ஆயிரம் கோடி ரூபாயை பெற்றால் மட்டுமே சாத்தியமாகும், இல்லையென்றால் முதலாளிகளின் கொள்ளை லாபவேட்டைக்காடாக தமிழகம் மாற்றப்படும். மின் நுகர்வோர்கள் மின் தேவையின் பேரால் வேட்டையாடப்படுவது நிச்சயம்.

**- கே. விஜயன்**

# அனல் மின்நிலையங்களில் தொடரும் தீ விபத்துகளும் தவிர்க்க வேண்டிய நடவடிக்கைகளும்



தமிழகத்தில் கோடை காலம் முடிவுக்கு வந்த பின்னரும் வெப்பத்தின் தாக்கம் குறைய வில்லை. காய்ந்த சருகுகள் தானாக தீப்பிடித்து எரியும் அளவிற்கு தமிழகத்தில் வெப்பம் தாக்கிக் கொண்டுள்ளது. இந்த வெப்பத் தின் தாக்கம் மின் உற்பத்தி செய்யும் அனல் மின் நிலையங் களையும் விட்டு வைக்கவில்லை. மக்களுக்கு ஒளியையும், குளிர்ச்சி யைம் தரும் மின்சார உற்பத்தி நிலையங்கள், வெப்பபிழம்பு களுக்கு இடையில் தான் செயல் பட்டுக் கொண்டுள்ளது. அனல் மின் நிலையங்கள் எங்கு நோக்கினும் தூசியும், மனித உடல் நலத்தை காவு கொடுக்கும் நிலக்கரி துகள் களுக்கிடையில் தான் ஊழியர்கள் பணியாற்ற வேண்டியுள்ளது.

அனல் மின் நிலைய வளாகத்தில் ஒரு பெரும் பகுதியான இடம் நிலக்கரியை குவித்து வைக்கும் குவிமையங் களாக உள்ளன. காய்ந்த சருகுகளே தானாக வே தீப்பிடிக்கும் இந்த வெப்பத்தின் தாக்கம், மிகச் சுலமாக தீப்பிடிக்கும் நிலக்கரி குவியல்களையும் நிலக்கரியை கொண்டு செல்லும் கன்வேயர் பெல்ட்டுகளையும் பதம் பார்க்கத் தான் செய்கிறது. கடந்த ஒன்று, இரண்டு மாதங்களில் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் பெரிய தீ விபத்தும், அதனால் பல நூறு கோடி ரூபாய் இழப்பும் மின் உற்பத்தி தடை பட்டதனால் பல ஆயிரம் கோடி வருவாய் இழப்பும் ஏற்பட்டதை கண் கூடாக பார்த்தோம். மேட்டூரையொட்டியே தூத்துக்குடி அனல் மின் நிலையத் தில் ஜூன் மாதத்தில் மட்டும் அடுக்காக 3, 16, 22 ஆகிய நாட்களில் தீ விபத்து ஏற்பட்டு பல லட்ச ரூபாய் இழப்பை சந்தித் துள்ளது.

அனல் மின் நிலையங்கள் சமீபத்தில் இந்த தீ விபத்து ஏன் ஏற்படுகிறது. இதை தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாதா? என்ற வினா பொதுச்சொத்துக்கள் மீது அக்கறை உள்ள அனைவர் மனதிலும் எழாமல் இருக்க முடியாது.

மின் நிலையத்தில் தீ விபத்து ஏற்படக்காரணம் சில நாட்களுக்கு தேவையான நிலக் கரியை பவுடராக்கி அதை மலைபோல் குவித்து வைக்கின்ற போது இப்போது நிலவும் வெப்பத்தால் நிலக்கரி பவுடர் தானாகவே தீப்பிடிப்பது என்பதை தவிர்க்க இயலாத ஒன்று. இதை தடுக்க வேண்டுமானால், நிலக்கரி பவுடர் குவியலின் மீதும், கன் வேயர் பெல்ட்டில் செல்லும் நிலக்கரி பவுடர் மீதும் தானாகவே தண்ணீரை தெளிக்கும் முறை உள்ளதை செயலாக்கச் செய்வதன் மூலம் தீ உருவாவதை, தீ விபத்தாக மாறுவதை தடுக்கிட முடியும்.

நிலக்கரி பவுடர் குவிய லின் மீது தானாக தண்ணீரை பீய்ச்சி அடிக்கும் திட்டமும் இல்லை, புகைகின்ற இடத்தில் தண்ணீரை பீய்ச்சுவதற்கு தண்ணீ ரும் இல்லை, போதிய ஆட்களும் இல்லாத நிலைதான் தீப்பொறி என்பது தீ விபத்தாக மாறி பல கோடி ரூபாய் இழப்பை உருவாக்கி விடுகிறது.

நிலக்கரி பவுடர் குவியலும், நிலக்கரியை கொண்டு செல்லும் கன்வேயர் பெல்ட்டு களும் செல்லும் இடம் சில நூறு மீட்டர்களாகும். இந்த சில நூறு மீட்டர்களை ஊழியர்கள் முறை யாக மேற்பார்வை இடுவதற்கு (LINE PETROL) போதிய ஆட்கள் நியமிப்பது கிடையாது.

தானாகவே தண்ணீரை பீய்ச்சி அடிக்கும் திட்டத்திற்கோ நிலக்கரி பவுடர் குவியலில் தீப்பொறி ஏற்படும் போது அதன் மீது தண்ணீர் தெளிப்பதற்கோ, குறுகிய கால இடைவெளியில் நிலக்கரி குவியலையும் கன்வேயர் பெல்ட்டுகளையும் மேற்பார்வை இட தேவையான ஆட்கள் நியமிப்பதன் மூலம் வாரியத்திற்கு சில லட்சங்கள் செலவாகும். அதை செய்யாமல் விடுவதனால் தீ விபத்தும், அதனால் ஏற்படும் இழப்பு பல கோடி ரூபாயாக உள்ளது.

நிலக்கரி பவுடரும்,

வெப்பமும், வீசுகின்ற காற்றும், எழுப்பும் தூசியை கட்டுப் படுத்துவதற்கு பலமுறைகள், பல கருவிகள் பொருத்தப்பட்டு இருப்பினும் அவைகள் முறையாக செயலற்று கிடப்பதால் எழுக்கின்ற தூசுகள் ஏற்படும் தீப்பொறியை கவனிக்க முடியாமல் தீப்பிழம்பாக மாறி தீ விபத்துக்கள் என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகி விடுகிறது. இந்த தூசு கட்டுப் பாட்டு கருவிகளை முறையாக செயல்படுத்துவதன் மூலம் தீ விபத்தை தவிர்த்திட இயலும். வெப்பத்தாக்கம் மிகுந்த இந்த கோடைக்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையினால் மின் நிலையத்தின் பல பகுதிகளில் உள்ள தண்ணீர் தொட்டிகள் அதன் மீது தண்ணீரை தெளிப்பதற்கு கூட தண்ணீர் இல்லாத தூத்துக்குடி மின் நிலையமாகவே உள்ளது.

நிலக்கரி பவுடரை கொண்டு செல்லும் கன்வேயர் பெல்ட்டுகள், தரமற்றவைகளாக உள்ளதும், வெகு சீக்கிரத்தில் தீப்பிடிக்கும் நிலையில்தான் உள்ளது. முன்பெல்லாம் நைலான் உறை வேய்ந்த கன்வேயர் பெல்ட்டுகளை பயன்படுத் தினார்கள். ஒரு மீட்டர் கன்வேயர் பெல்ட் ரூ.9000/- (ரூபாய் ஒன்பதாயிரம்) என்பதனால் அதை வாங்குவதை தவிர்த்து 1 மீட்டர் ரூ. 900/- (ரூபாய் தொள்ளாயிரம்)க்கு தரமற்ற கன்வேயர் பெல்ட்டுகளை பயன்படுத்துவதினால்தான் பெல்ட்டுகள் அடிக்கடி சேதமடைவதும் தீ விபத்துக் குள்ளாவதும் அன்றாட நிகழ்வாக மாறி உள்ளது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ஜூன் திங்களில் ஏற்பட்ட தீ விபத்து ஓல்டு கிரஸ்லர் ஹவுஸ் இல் தான் தீ விபத்து ஏற்பட்டு பெரும் நட்டத்தை உருவாக்கியது. அந்த கிரஸ் ஸர் அவுஸ் என்பது மிக உயர்ந்த கட்டிடமாகும். அந்த கட்டிடத்தின் மேலறைகளுக்கு செல்ல லிப்ட் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது ஏற்படுத்திய நாளில் இருந்து இன்று வரை செயலற்ற லிப்டாகவே இருந்ததால் தான் தீ விபத்து ஏற்பட்ட பொழுது மேல்பகுதிக்குச் சென்று தீயை அணைக்க முடியாத துயர நிலை ஏற்பட்டது.

1050 மெகாவாட், உற்பத்தி செய்யக் கூடிய தூத்துக்குடி அனல் மின் நிலையத் தில், அனல் மின் நிலையத்திற் கென்று தனியாக தீ அணைக்கும் வாகனங்கள் ஏதுமில்லை. இருக் கின்ற மூன்று வாகனமும் தீ அணைப்புத் துறை கட்டுப் பாட்டில் உள்ளது. இதை மாற்றி மின் நிலையத்திற்கென தீ அணைப்பு வாகனங்களை வாங்கி தீ விபத்து ஏற்படும் போது வேகமாக பயன்படுத்தி தீயை கட்டுக்குள் கொண்டு வர முடியும். நவீன இன்றைய காலத்தில் மின் நிலையத்தின் மிக உயரமான பகுதிக்கு தண்ணீரையோ, தீ அணைக்கும் திரவத்தையோ பீய்ச்சி அடித்து தீயை அணைக்க முடியும். ஆனால் மின் நிலைய வளாகத்தில் இருக்கும் தீ அணைப்பு வாகனத்தில் வெறும் 60 மீட்டர் உயரத்திற்குதான் தண்ணீரையோ, தீ அணைக்கும் திரவத்தையோ பீய்ச்சி அடிக்கும் வாகனங்களே உள்ளன. இந்த நிலையில் ஏற்படுகின்ற தீ விபத்தை எப்படி கட்டுப் படுத்தமுடியும்.

நிலக்கரி பவுடரை கொண்டு செல்லும் கன்வேயர் பெல்ட்டுக்கு கீழே விழுக்கின்ற நிலக்கரியை அவ்வப்பொழுது அப்புறப்படுத்துவதும் கிடையாது. ஏனெனில் இவைகள் அனைத்தும் ஒப்பந்த முறைக்கு விட்டு செய்வது என்பது தான் நடைமுறையாக உள்ளதே தவிர, தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தி அந்த பணியை செய்வது என்பது நடைமுறை இல்லாத காரணத்தால் சிதறிக்கிடக்கும் நிலக்கரியை எடுக்கின்ற பணிகள் கூட முறையாக நடைபெறுவது கிடையாது. இவைகள் அனைத்து மே அனல் மின் நிலையங்களில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்பட்டு பல கோடி நட்டங்கள் ஏற் படுகின்றன.

தொழிலாளர்களை பொறுத்த வரையில் கரி, தூசுக் களுக்கிடையில் பணியாற்று வதை கணக்கில் கொண்டு அவர்களுக்கு ஒரு கணிசமான தொகையை அளித்து அவர் களுடைய பணியை ஊக்குவிக்கச் செய்ய வேண்டும். அது மட்டு மல்லாமல் கடுமை யான சூழ்நிலை யில் பத்து பதி னைந்து ஆண்டுகள் ஒரே இடத்தில் பணியாற்றுவதால் அவர் கள் பணி நிலமையில் சோர்வு ஏற்படும் சூழல் உருவாகிறது. இதை அகற்றுவதற்கு ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் சுழற்சி முறையில் ஊழியர்களை மாற்றுவதன் மூலம் ஒரு உத்வேக உணர்வோடு செயலாற்றும் நிலையை உருவாக்கிட முடியும்.

இவை அனைத்தும் தூத்துக்குடி அனல் மின் நிலையத் தில் ஏற்பட்ட தீ விபத்து இடத்தை மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர். எஸ்.எஸ். சுப்பிரமணியன், மின் நிலைய வட்ட செயலாளர் தோழர் கணபதி சுரேஷ், தலைவர் ஞானப் பிரகாசம், தோழர். அப்பாதுரை, தோழர் கஜேந்திரன் ஆகியோர் கொண்ட குழு 21.7.2012 இல் பார்வையிட்ட போது அங்கு பணியாற்றும் தொழி லாளர்கள் அதிகாரிகள் கூறி கருத்துக்களே ஆகும்.

தமிழக அரசும், மின் வாரியமும் இப்படிப்பட்ட சிறிய பணிகளை செய்து தீ விபத்தை தடுக்குமா! கோடிக்கணக் கணக் கான ரூபாய் நட்டத்தை தவிர்க் குமா! காலம் தான் பதில் சொல் லும்!

**- எஸ்.எஸ். சுப்பிரமணியன்**



# உழைப்பு சுரண்டலும் மின்வாரிய அதிகாரிகளும்

மேட்டூர் அனல் மின் நிலையம் தனது உச்சபட்ச உற்பத்தியான 840 மெகாவாட் மின்சாரத்தை கம்பியிலே கடத்தும் போது அதனுடன் சேர்த்தே கண்ணுக்கு தெரியாமல் கடத்தப்படும் தினக்கூலி தொழிலாளர்களின் எதிர்காலம் குறித்து வேதனையுடன் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது.

அனல் மின் நிலைய வளாகத்துக்குள்ளே கழிவறைகளை சுத்தம் செய்வது, குப்பைகளை அகற்றுவது, மரங்களை வெட்டுவது, புல் புதர்களை சுத்தம் செய்வது, கழிவாக வெளிவரும் சாம்பலை சிமெண்ட் கம்பெனிகளுக்கு ஏற்றுமதி செய்வது, இயந்திர பராமரிப்பு பணிகள், பழுது நீக்கும் பணிகள், தோட்ட வேலைகளை மேற்கொள்ளுவது இன்னும் பல்வேறு பணிகளை தினக்கூலி அடிப்படையில் வேலைக்கு ஒப்பந்ததாரர்கள் மூலம் அழைத்து வரப்படும் தொழிலாளர்களைக் கொண்டு செய்யப்படுகிறது. இவ்வாறு பணிசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 250 க்கும் மேல் இருக்கும்.

தொழிற்சாலைகள் சட்டப்படியும், அரசு ஆணைப்படியும் பதிவு செய்யப்பட்ட ஒரு தொழிற்சாலை வளாகத்திற்குள் எந்தவிதமான பணிகளை தினக்கூலி தொழிலாளர்கள் செய்தாலும் அந்தப் பணிகள் அந்த தொழிற்சாலைகயின் பணியாகத்தான் கருதப்பட வேண்டும். எனவே அத்தகைய தொழிலாளர்களுக்கு முறையாக வருகைப் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். சம்பளம் என்பது Aquittance மூலம் தான் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு சம்பளம் வழங்கும்போது அந்த தொழிலாளர்களுக்கு EPF பிடித்தத்துடன் ஒப்பந்ததாரர் ஒரு குறிப்பிட்ட சதவீதம் தொகையினை சேர்த்து தொழிலாளியின் பெயரிலே EPF அலுவலகத்தில் கண்க்கில் செலுத்தப்பட வேண்டும். அரசு ஆணை எண். G.O. Ms.No.205, Labour and employment department dt 04.10.2010 மற்றும் சென்னை தொழிற்சாகைள் தலைமை ஆய்வர் அவர்களின் குறிப்பாணை எண் பி1/25087/2009 நாள் 15.10.2010 ன்படி ஆலை வளாகத்திற்குள் பணிக்கு வரும் அனைத்து வகையான தொழிலாளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை என்பது முதன்மை வேலை அளிப்பவர் (அ) ஒப்பந்தாரர் மூலமாக கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அனைத்து ஒப்பந்த தொழிலாளர் சட்டங்களும் இத்தகைய தொழிலாளர்களுக்கும் பொருத்தப்பட வேண்டும் என்பது போன்று பல்வேறு சட்டப்பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தாலும் இவற்றில் ஒன்றைக்கூட பின்பற்றாத மேட்டூர் அனல் மின் நிலைய நிர்வாகம் கம்பியிலே 840 மெகாவாட் மின்சாரத்தை செலுத்துவதிலே பெருமைப்பட்டுக் கொள்ள ஒன்றும் இல்லை. மாறாக இத்தகைய தினக்கூலி தொழிலாளர்களை ஒப்பந்தக்காரர்கள் மிகவும் கடினமாக பணிகளை வாங்கிக் கொண்டு மிகக்குறைந்த கூலியை கொடுப்பதை அதிகாரிகள் கடுகளவும் கண்டு கொள்ளாமல் ஒப்பந்ததாரர்கள் தங்களுக்குள் ஏற்படும் போட்டி காரணமாக இத்தகைய பணிகளை குறைவான தொகைக்கு செய்து கொடுப்பதாக ஏலம் எடுப்பதாகவும் அவர்களால் அதற்கு மேல் கொடுக்க முடியாது என்றும் ஒப்பந்தாரர்களுக்கு சாதகமாக பேசுவதை வாடிக்கையாக கொண்டுள்ளார்கள்.

மற்ற விநியோக வட்டங்களிலே குறைந்த பட்ச கூலி ரூ.120/- ஐ மின்சார வாரியமே கொடுத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் இந்த அனல் மின் நிலையத்தில் ரூ.80/-ஐ மட்டுமே கூலியாக கொடுத்து உழைப்பை உறிஞ்சிக் கொண்டிருக்கும் அவலமான நிலைமைதான் ஒரு ISO தரச்சான்று பெற்ற தொழிற்சாலையின் மேன்மையா?

மின்சார வாரியத்தில் மின் விநியோக வட்டங்களிலே பணிபுரிந்த தினக்கூலி தொழிலாளர்கள் அடையாளம் காணப்பட்ட ஒப்பந்த

தொழிலாளர்களாக பணியாற்றி பணி நிரந்தரம் நோக்கி சென்று விட்ட நிலையில் அனல் மின் நிலையங்களில் மட்டும் இந்த தொழிலாளர்கள் என்ன பாவம் செய்தார்கள்?.

இந்த அனல் மின் நிலைய உற்பத்தியுடன் இணைந்த பல்வேறு ஆபத்தான பணிகளை மேற்கொண்டு தினந்தோறும் 8 மணி நேரத்திற்கும் கூடுதலாக பணியாற்றும் இந்த தொழிலாளர்கள் தொடர்ந்து பல ஆண்டுகாலமாக இங்கேயே பணியாற்றி வருகின்றனர்.

இவர்களின் பிரச்சனையை தொழிற்சாலை ஆய்வாளர் அவர்களிடம் முறையீடு செய்தால் அவர் முறையாக வழங்கப்பட வேண்டிய புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை (தொழிற்சாலைகள் சட்டம் 1948 திருத்தப்பட்ட சட்டம் 1897 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகளின் விதிகள் 1950 பிரிவு 112 விதி 103 சின்படி) உடனடியாக வழங்க வேண்டும் எனவும், ஒப்பந்த தொழிலாளர்களுக்கு EPF பிடித்தம், வருகைப்பதிவேடு உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் முதன்மை வேலையளிப்பவர் என்ற அடிப்படையில் மேட்டூர் அனல் மின் நிர்வாகம் பராமரிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தி கடிதம் அனுப்புகிறார். ஆனால் இந்த மாதிரி எத்தனை கடிதங்கள் வந்தாலும் அதன் மீது எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, பொருளாதார ரீதியில் கடைமடையில் உள்ள தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள் அதிகம் பணிபுரியும் இந்த அனல் மின் நிலையத்திலேயே அவர்களுக்கான சட்டரீதியாக வழங்கப்படவேண்டிய குறைந்தபட்ச கூலி, ஆவணங்கள் பராமரிப்பு, விபத்து காப்பீடு, EPF இன்னும் ஏராளமான சலுகைகளை புறம்தள்ளி ஒப்பந்ததாரர்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் மேட்டூர் அனல் மின் நிலைய அதிகாரிகளை எந்த சட்டமும் கட்டுப்படுத்தாதா? இதற்கும் மேலாக ஒருபடி சென்று தகவல் உரிமைச் சட்டத்தில் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் ஒப்பந்தம் மற்றும் தற்காலிக தொழிலாளிகளே இல்லை என்று கூறி முழுப் பூசனிக்காயை சோற்றிலே மறைப்பதைப்போல உண்மையை மறைக்கிறார்கள் இங்குள்ள அதிகாரிகள். அரசாணை மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறையினர் உத்திரவுகளை அமல்படுத்தாததற்காக இந்த அதிகாரிகள் மீது எந்த துறையை சேர்ந்தவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்ற கேள்வியோடு இந்த தினக்கூலி தொழிலாளர்களின் உரிமைகளை மீட்டெடுக்க, இவர்களை அடையாளப்படுத்த, இவர்களுக்கு சமூக அந்தஸ்து பெற்றுத்தர பல்வேறு முயற்சிகளையும் போராட்டங்களையும் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு தொடர்ந்து செய்து கொண்டுதான் இருக்கிறது.

எஸ். செந்தில்வேலன்
மேட்டூர் அனல் கிளை

## நாட்டிலேயே அதிக அளவு மின் உற்பத்தி செய்யும் மாநிலம் சத்திஸ்கரே!

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் சத்தீஸ்கர் மாநிலமே மின் உற்பத்தி அதிகரிப்பில் முதன்மை மாநிலமாக உள்ளது. இப்போதுள்ள நிலையில் மின்சார உற்பத்தியில் உபரி மாநிலமாகவும், நிதிநிலை உட்பட லாபம் ஈட்டக்கூடிய மின்வாரியமாக உள்ளது. சத்தீஸ்கர் மாநிலம் புதிய மாநிலமாக இருந்த போதிலும் அந்த மாநிலத்தின் மின் தேவையை உற்பத்தி செய்யக்கூடிய நிலையிலும், நல்ல நிதி நிலையில் உள்ள மின் வாரியமாக உள்ளது. சத்திஸ்கர் மாநிலத்தில் கோர்பா பிலாஸ்பூர் போன்ற மாவட்டங்களில் உற்பத்தியாகும் கூடுதல் மின்சாரத்தின் மூலமாக அந்த மாநிலத்தில் உபரி மின் உற்பத்தி செய்யும் மின்சார வாரியமாக மட்டுமல்லாமல், இதர மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்கும் வாரியமாக செயல்பட்டு வருகிறது.

டெல்லியில் உள்ள மின் நிதி கழகத்தின் ஆய்வின் அடிப்படையில் மேலும் 61000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்புள்ள மாநிலமாகவும் இந்த மின் நிலைங்கள் அனைத்தும் அனல் மூலம் உற்பத்தி செய்யும் வாய்ப்பும் அதற்கு தேவையான நிலக்கரி 100 ஆண்டுகளுக்கு கிடைக்கக்கூடிய சாதகமான நிலமை உள்ளது. அது தவிர 2500 மெகாவாட் புனல் மூலம் மின் நிலையம் அமைக்கும் வாய்ப்பும் உள்ளது. இந்த அரிய வாய்ப்புகளை பயன்படுத்தி கூடுதல் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்கள் வாரியம், அரசிடம் உள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தின் மைய பகுதியாக உள்ள ஜான்ஜிகார், சேம்பா ஆகிய மாவட்டங்கள் இன்னும் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்குள் மின்சார உற்பத்தியை உயர்நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் நிலக்கரியை எரிபொருளாக பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் 34 தனித்தனியான ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளது இந்த திட்டங்கள் முழுவதும் அமுல் படுத்தப்படும் போது ஜான்ஜியா, சேம்பா மாவட்டங்கள் இந்தியாவிலேயே 40,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வலிமை மிகு மாவட்டங்களாக திகழ உள்ளன.

ஆனால் ஆபத்து என்னவெனில் இந்த 40,000 மெகாவாட் மின்சார உற்பத்திக்கு செய்வதற்கு 40,000 ஏக்கர் விளை நிலங்கள் மின் நிலையங்கள் அமைக்கும் இடங்களாக மாற உள்ளது. இந்த 40,000 ஏக்கர் விளைநிலம் என்பது இந்தியாவிலேயே தானிய உற்பத்தி செய்யும் இடத்தை இழக்க வேண்டிய நிலமை ஏற்பட உள்ளது.

# நீங்களும் தெரிந்து கொள்ளலாம்

## இந்தியாவில் முதன் முதலில் மின்சாரம் நிலையம் எங்கு அமைக்கப்பட்டது?

இந்தியாவில் மின் நிலையங்கள் அமைப்பு சம்மந்தமாக பல விபரங்கள் உள்ளன. ஆனால் இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்தில் தான் மின் நிலையம் அமைக்கப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. இந்திய மின்சார கம்பெனி லிமிடெட்டில் மின்சார ஒளி வழங்கும் உரிமைக் கான இசைவை 1887 ஜனவரியில் கில்பர்ன் என்ற கம்பெனி பெற்றது. அது பின்னர் கல்கத்தா மின் வழங்கு கழகமாக மாற்றப்பட்டது. கல்கத்தாவில் மின்சார உற்பத்தி கம்பெனி 1889 இல் துவங்கப் பட்டது என்றும் தகவல்கள் கூறுகின்றன. மேலும் 1905 இல் முதன் முறையாக டெல்லியில் டீசல் மூலமாக மின் உற்பத்தி நிலையம் அமைக்கப் பட்டது. இந்த உற்பத்தி நிறுவனம் யான்பிளமிங் என்ற ஆங்கிலேயரால் தோற்றுவிக்கப்பட்டது. இந்த கம்பெனியே டெல்லியில் உள்ள லகோரி கேட்டில் 2 மெகாவாட் டீசல் மூலம் மின் உற்பத்தி செய்யும் மின் நிலையம் அமைக்கப்பட்டது இந்த கம்பெனியே பிற்காலத்தில் டெல்லி மின் வழங்கு பாதை அமைக்கும் கம்பெனியாக விஸ்தரிக்கப் பட்டது.

## இந்தியாவில் முதல் புனல் மின் நிலையம் எங்கு எப்போது அமைக்கப்பட்டது?

இந்தியாவில் 1902 இல் கர்நாடகா மாநிலம் மைசூரில் சிவசமுத்திரம் என்ற இடத்தில் முதன் முதலாக புனல் மின் நிலையம் அமைக்கப்பட்டது. அது பின்னர் மும்பை போன்ற நகரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது.

## மின்சார பற்றாக்குறை தொடர் நிகழ்வா?

ஆம், தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு மின் உற்பத்திக்கு திட்டமிடுவதில் தொடர்ச்சியாக குறை என்பது இருந்துள்ளது. உதாரணத்திற்கு இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்ற காலமான 1940 களில் பம்பாய், டெல்லி, சென்னை, மேற்கு வங்கம் மற்றும் உத்தரபிரதேசத்தின் ஒரு பகுதியில் மின்சார பற்றாக்குறை நிலவியதாக வரலாறு கூறுகிறது.

## மின்சார மசோதாக்களும், சட்டங்களும் வந்த வரலாறு என்ன?

முதன் முதலில் இந்தியாவில் மின்சார சட்டம் என்பது 1887 இல் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்தின் நோக்கம் உயிர்களும், சொத்தும், சேதத்திலிருந்து பாதுகாப்பது, மேலும் மின்சார விநியோகம், விளக்குகள் அமைத்தல் போன்ற வற்றை நோக்கமாக கொண்டு செயல்படுவது. பின்னர் இந்த சட்டம் இந்திய மின்சார சட்டம் 1903 ஆக மாற்றம் பெற்றது. இந்த சட்டத்தில் மின்சார மொத்த வியாபாரத்தை பற்றி மத்திய, மாநில இரு அரசுகளின் கட்டுப்பாட்டில் இயங்குவது. இவை போன்ற பிரச்சனைகளை மையமாக வைத்து அதில் உரிய மாற்றங்களோடு இந்திய மின்சார சட்டம் 1910 இல் உருவாக்கப்பட்டது. மின்சார சட்டம் 1910 சிலமாற்றங்களோடு மின்சார சட்டம் 1948 ஆக மாற்றப்பட்டது. மின்சார வழங்கு சட்டம் 1948 அடிப் படையில்தான் மாநில மின்சார வாரியங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

இந்திய மின் வழங்கு சட்டம் 1948 இல் சில மாற்றங்களோடு ஒழுங்குமுறை ஆணையங்கள் அமைப்பதற்கான சில திருத்தங்களோடு இந்திய மின்சார சட்டம் 1998 ஆக மாற்றப்பட்டது. அதன் பின்னர் புதிய பொருளதார கொள்கையை அமல் படுத்துவதற்கு உதவிடும் வகையில் மின்சார சட்டம் 2003 ஆக மாற்றப்பட்டு இன்றைக்கு அது செயலில் உள்ளது.

தொகுப்பு : எஸ்.எஸ்.எஸ்

## தமிழக அரசு வீட்டு மின் நுகர்வோர்களக்கு 740/- கோடி மான்யம்

தமிழக அரசு சமீபத்தில் மின் கட்டண உயர்வை அளித்தது. அதன் பின்னர் 3.4.2012 அன்று தமிழக சட்டமன்றத்தில் விவாதம் நடத்த முடியாத விதிகளின் கீழ் தமிழக முதல்வர் தன்னிச்சையான அறிவிப்பினை அறிவித்தார் அறிவிப்பில் அறிவித்த மின் கட்டணத்தில் 740 கோடி ரூபாய் மான்யமாகவும் அதனால் ஒரு கோடியே 5 லட்சம் மின் நுகர்வோர்கள் வரியிலிருந்து விலக்கு பெறுவார்கள். சட்டமன்றத்தில் அறிவித்த 740/- கோடி ரூபாய் மான்யத்தோடு சேர்ந்து மொத்த மான்யத் தொகை 4294.16 /- கோடி அரசு மான்யமாக வழங்கிடும் என்று அறிவித்துள்ளார். அதாவது இரண்டு மாதங்களில் 100 யூனிட்டுகளை நுகரும் மின் நுகர்வோர்கள்கள் மின் கட்டணமாக ரூ.1.10 காசு செலுத்துவதற்கு பதிலாக ரூ.1/- செலுத்தலாம் என்று அதே போல் 200 யூனிட்டுகளை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மின் நுகர்வு செய்யும் நுகர்வோர்கள் 1 யூனிட்டிற்கு ரூ.1.80 பைசாவுக்கு பதிலாக ரூ.1.50 பைசா செலுத்தினால் போதும் என்று அறிவிப்பினை தமிழக முதல்வர் அறிவித்து மான்ய தொகையை உயர்த்தியுள்ளார்.

# உணவுப் பாதுகாப்பு







து. கோவிந்தராஜு

அடிப்படையில் இந்தியா ஒரு விவசாய நாடு 120 கோடிக்கும் மேலான ஜனத்தொகை கொண்ட உலகின் இரண்டாவது பெரிய நாடு இந்தியா. தேவையை உணர்ந்து சுதந்திர இந்தியாவின் ஆரம்ப கால ஐந்தாண்டு திட்டங்களில் உணவு தானிய உற்பத்திக்கு முன்னுரிமை கொடுத்து ஒட்டுமொத்த வருமானத்தில் 3ல் 1 பங்கு தொகையை விவசாய துறைக்கு ஒதுக்கினார்கள்.

Any thing can wait, Except Agricultural - என்று அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் பாராளுமன்றத்தில் முன்மொழிந்து விவசாயத்திற்கு உயர் முன்னுரிமை வழங்கினார். கிராமப்புற வங்கிகள் அதனுடைய பரிவர்த்தனைகளில் 40 சதவீதம் விவசாயத்திற்கு கடனாக வழங்க வேண்டும் என்று நிர்பந்திக்கப்பட்டது.

நிலங்கள் பண்படுத்தபட்டன, பாசன வசதி மேம்படுத்தப்பட்டது, புதிய அணைகள் கட்டப் பட்டன, மானிய விலையில் விவசாயிகளுக்கு இடு பொருள்கள் வழங்கப்பட்டன. இந்திய விவசாயிகள் உழைப்பை விதைத்து உணவு பொருள்களை அறுவடை செய்தனர்.

உணவுக்காக அன்னிய கப்பலை எதிர்நோக்கியிருந்த காலம் மலையேறி உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற்றது.

1950ஆம் ஆண்டு சுதந்திர இந்தியாவில் மொத்த உணவு உற்பத்தி 5.1 கோடி டன்னாக இருந்தது. இதே ஆண்டில் இந்தியாவில் மொத்த வருமானத்தில் 56.59 சதவீதம் விவசாயம் மூலமாக வரவானது.

இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி பருப்பு உள்ளிட்ட எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை தவிர்த்து அரிசி, மற்றும் கோதுமை தானியங்களின் உற்பத்தி கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் கீழ்கண்டவாறு உயர்ந்துள்ளது.

| வ. எண் | ஆண்டு | உணவு தானிய உற்பத்தி (அரிசி, கோதுமை) |
|---|---|---|
| 1. | 2008-2009 | 23.59 கோடி டன் |
| 2. | 2009-2010 | 23.45 கோடி டன் |
| 3. | 2010-2011 | 24.48 கோடி டன் |
| 4. | 2011-2012 | 25.74 கோடி டன் |

2011-2012 ஆம் ஆண்டு உணவு உற்பத்தி எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. பாரத பிரதமர் இந்த சாதனையை நிகழ்த்திய இந்திய விவசாயிகளை வெகுவாக பாராட்டி உள்ளார்.

உரமானிய வெட்டு, இடுப்பொருட்களின் விலைஉயர்வு, பாசனவசதியின்மை, விலை நிலையங்கள் ரியல் எஸ்டேட்டுகளாகவும், பன்னாட்டு கம்பெனிகளாகவும், சிறப்பு பொருளாதார மண்டலங் களாகவும், கல்வி நிறுவனங்களாகவும் மாற்றப் படுவதால் உற்பத்தி நிலங்களின் அளவு குறைவு, விளைவிக்கும் பொருட்களுக்கு கட்டுப்படியாகாத விலை நிர்ணயிப்பு, விவசாய ஆட்கள் பற்றாக்குறை, பருவமழை தவறுதல், அரசின் ஐந்தாண்டு திட்டங்களிலும், நிதி நிலை அறிக்கைகளிலும், விவசாயத்திற்கான மானியம் குறைப்பு .. இவ்வளவு இடையூறுகளுக்கு இடையிலும் இந்திய விவசாயிகள் உணவு தானிய உற்பத்தியில் சாதனையை அளவை சாதித்துள்ளார்கள்.

இந்தியாவின் மொத்த உணவு தானிய உற்பத்தி 25.74 கோடி டன் உணவு பொருட்களில் இந்தியாவின் 125 கோடி ஜனங்களுக்கான தேவை 5.50 கோடி டன் மட்டுமே.

ஆக தேவைக்கும் அதிகமாக உணவு தானியம் உற்பத்தி செய்யப்படும் இந்தியாவில் 40 கோடிக்கும் மேலான மக்கள் இரவு வேலைகளில் உண்பதற்கு உணவில்லாமல் உறங்க செல்கின்றார்கள்

என்ற புள்ளி விவரம் கூறப்படுகிறதே இது எப்படி.?

தேவையைவிடவும் நான்கு மடங்கு கூடுதலாக உணவு பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் நாட்டில் பஞ்சமும் பட்டினியும் ஏன் தொடர்கிறது? விலைவாசி உயர்வு ஏன் விண்ணை முட்டுகிறது?

மத்திய மாநில அரசுகள் இருக்கிறது பொது விநியோக முறை இருக்கிறது, 5.5.2011ல் புதியதாக நிறைவேற்றப்பட்டுள்ள உணவுப்பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் இருக்கிறது. இருந்தும் இந்த நிலை தொடர்கிறது. காரணம் கண்டுபிடித்து களைய வேண்டிய வேலையை அரசு செய்ய வேண்டும்.

இந்தியாவில் உற்பத்தியாகும் உணவு பொருட்களை கொள்முதல் செய்து பாதுகாப்பாக பதப்படுத்தி சேமித்து வைக்கும் வேலையை இந்திய உணவுக்கழகம் செய்கிறது. இந்திய உணவு தானிய சேமிப்பு கிடங்குகளில் 6.40 கோடி டன் உணவு தானியங்களை மட்டுமே சேமித்து வைக்கும் வாய்ப்பும் வசதியும் உள்ளது.

இதில் கூட சுமார் 1.94 கோடி டன் உணவு தானியங்கள் முறையான பாதுகாப்பும் பராமரிப்பும் இல்லாததால் மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து வீணாகிறது.

மத்திய அரசின் தாராளமயக் கொள்கையினாலும், தவறான வறுமை கோட்டு நிர்ணயிப்பினாலும் போதிய தானியம் கையிருப்பு இருந்தும், இந்திய மக்களில் சரிபாதி அளவினர் பசியால் வாடுகின்றனர்.

உணவுக்கான மானியத்தை குறைத்து பொது விநியோகம் மூலம் பயன்பெறுவோரின் எண்ணிக்கையையும் குறைக்க மத்தியஅரசு முடிவெடுத்து செயல்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக பொது விநியோக முறையில் வழங்கப்படும் பொருட்களுக்கு பதிலாக ரூபாய் 1000/- பணமாக வழங்கலாம் என்ற மோசமான முடிவை முன்னோடி திட்டம் என்று அறிமுகப்படுத்தும் முயற்சியும் நடைபெற்றுக் கொண்டு உள்ளது. இந்த திட்டத்தின் படி ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் பணத்தின் அளவு மாறாது. அந்த பணத்தைக் கொண்டு வாங்கப்படும் பொருட்களின் விலை மட்டும் ஏறிக்கொண்டே போகும் ஆபத்தும் இந்த முன்னோடி திட்டத்தில் முடங்கி கிடக்கிறது.

உபரி உற்பத்தியும், கையிருப்பும், அரிசியும், கோதுமையும் தான். ஏனைய பருப்பு வகைகளின் உற்பத்தி தொடர்ந்து வெகுவாக குறைந்துள்ளது. எதிர் காலத்தில் பருப்பு வகைகளின் விலைஉயர்வு கடுமையாக இருக்கும். இம்மாத துவக்கத்தில் ரூபாய் 7700/-க்கு விற்கப்பட்ட 100 கிலோ துவரம் பருப்பு தற்போது ரூ. 10,000க்கு விற்கப்படுகிறது.

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தி அனைவருக்கும் உணவு பொருட்கள் கிடைப்பதை மத்திய, மாநில அரசுகள் உறுதிப்படுத்திட கீழ்கண்ட நடவடிக்கை களை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

1. ***5.5.2011ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தில் இடது சாரி இயக்கங்கள் கோருகின்ற திருத்தங்களை உடனடியாக செய்ய வேண்டும்.***
2. ***விலை நிலங்களின் அளவை பராமரிக்க வேண்டும், மொத்த நில பரப்பில் 33 சதவீதம் அளவில் விவசாயம் செய்யப்படுவதை உத்ரவாதப்படுத்த வேண்டும்.***
3. ***தண்ணீரும் மின்சாரமும் விவசாயத்திற்கு தடையின்றி வழங்கப்பட வேண்டும்.***
4. ***விவசாய உற்பத்தி பொருட்களுக்கு கட்டுப்படியாக விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.***
5. ***விவசாய இடுப் பொருட்களின் விலைகளுக்கான மானியத்தை அரசு தொடர்ந்து வழங்க வேண்டும்.***
6. ***பொது விநியோக முறையில் பயன்பெறுவோர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். மோசடியான டெண்டுல்கர் கமிட்டியின் வறுமைக் கோட்டு வரையறை நீக்கம் செய்யப்பட வேண்டும்.***
7. ***உள்நாட்டு தேவைக்கு முன்னுரிமை கொடுத்து உணவு தானிய ஏற்றுமதியில் குறைப்பு செய்ய வேண்டும்.***
8. ***சுதந்திர வணிக ஒப்பந்தம் - யூக வர்த்தகங்களை தடை செய்ய வேண்டும்.***
9. ***முன்னுரிமை தொழிலாக விவசாயத்தை அரசு அங்கீகரிக்க வேண்டும்.***
10. ***விவசாய மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டும்.***

## நிர்ணயிக்கப்பட்ட 4 ஆண்டுகால வரையறைக்குள் ஓய்வு பெறுபவர்களுக்கு LTC அனுமதி குறித்த வாரியக் குறிப்பாணை

**Memorandum (Per.) No. 6329/A18/182/12-1 (Secretariat Branch ) dated 13.03.2012**

Sub : Establishment - TANGEDCO - Leave Travel Concession - Eligiblity of the officals who retire in the middle of the Block Year - Instructions - Issued.

Ref :
1. G.O. Ms. No. 407, Finance Department, dated 15.06.1981
2. Government Lr. No. 92746/PC-1-85-1, Finance (PC) Dept., dt. 18.05.1987
3. G.O. Ms. No. 331, Finance (BPE) Department, dated 09.05.1988
4. B.P. Ms.(FB) No. 27 (Adm. Branch) dated 26.05.1988
5. U.O. Note No. 2202 / A15/A151/2012 dated 25.01.2012

In G.O. Ms. No. 407, Finance Department, dated 15.06.1981, the Government introduced the Leave Travel Concession scheme to the Government servants to perform journey either on one way for two years or on both ways for four years. In its letter dated 18.05.1987, the Government have clarified that the employees who are having service period less than two years, may avail Leave Travel Concenssion for a single way and who are having service period of more than two years, may avail LTC for both ways. But, the above said Leave Travel Consession scheme was not extended to the employees of State Public Sector Undertakings/Boards. Subsequently. during 1988, the Government extended the Leave Travel Concession Scheme to the employees of SPSUs/Boards vide G..O. Ms. No. 331, Finance (BPE) Department, dated 09.05.1988. In the said G.O. among other things it has been ordered as follows:-

"Instead of allowing the employees of the SPSUs/Board to avail the families once in two years by reimbursing either to or fro expenses on travel, they may be allowed to avail themselves of this facility once in four years, taking four years as the block year and allowing them the reimbursement of travel expences both to and fro."

The above said G.O. was adopted in TANGEDCO (erstwhile Tamil Nadu Electricity Board) and orders have been issued allowing the employees to avail the concession once in a block of four years and to reimburse the cost of journey for both ways - vide B.P. Ms. No. 27 (Adm. Branch) dated 26.05.1998. As the TANGEDCO has permitted the employees to avail the Leave Travel Concession once in four years for both ways based on G.O. Ms. No. 331, Finance (BPE) Department, dated 09.05.1988, the clarfication issued by the Government in Lr. No. 92746/PC-1/85-1, dated 18.05.1987, which was issued prior to the date of issue of G.O. 331 dt. 09.05.1988, was not adopted in TANGEDCO.

2. Now, instance have come to the notice that certain officials who have availed the Leave Travel Concession during the previous Block year 2008-2011 and who are due to retire from service before the middle of the next Leave Travel Concession on both ways in the current Block year. The issue has been examined in detail and it has been decided to adopt the clarification issued by the Government in its Lr.No. 92746/PC-I/85-1 dated 18.05.1987 in TANGEDCO

3. Accordingly, the following instructions are issued to all the Leave Sanctioning Authorities, who are authorised to sanction the Leave Travel Concession for strict adherence:

i) The officers/employees who are having the remaining service period of less than two years, may be permitted to avail Leave Travel Concession, but the fare shall be restrictd to "One Way" only.

ii) The officers/employees who are having the remaining services period of more than two years, may be permitted to avail Leave Travel Concession for both ways and

iii) The above instructions shall come into effect from the Block year 2012-2015. However, the past cases need not be reopened.

4. The receipt of this Memorandum shall be acknowledged in the slip enclosed.

(By Order of the Chairnan-cum-Managing Director)

**A.S. Pasupathi**

Secretary

## மின் கட்டண கணக்கீடு மற்றும் வசூல் பணிக்கு மதிப்பூதியம்

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD**
**ACCOUNTS BRANCH**

**144, Anna Salai, Chennai -2**
**Dated : 14.05.2012**

**Memo. No. CFC/FC/DFC/Rev./D.No.288/2012**

Sub : Electricity - Low Tension services - Assessment and Collection and remittances of CC charges - Services remain un assessed - payment of Honorarium - Further extension upto 31.12.2012 Orders issued

Ref : 1. Memo. No. CFC/Rev/FC/R/DFC/R/D.No.103/2009 Dated 18.05.2009
2. Memo. No. CFC/Rev/FC/Rev/ D: /2010 Dt. 2.1.2010
3. Memo. No. CFC/FC/DFC/R/AO/R/F. Honararium D.38/11 Dated 28.1.11
4. Memo. No. FCF/Rev/FC/R/D: 2010 /Dt. 17.09.2011

Orders were issued vide the reference 4th cited to utilize the services of Existing/retired staff for the assessment of un assessed LT services in order to ensure 100% Assessment, Collection and remittance of all services of all services up to 31.12.2011 on payment of honorarium.

2. As requested by the Circles for the extension of time for Assessment and collection in respect of the LT Services due to shortage of Assessors, the same after careful consideration, ordered that the above arrangement of engaging the existing and retired staff for assessment, is further extended upto 31.12.2012

3. Therefore it is directed to ensure 100% assessment in all the LT services including new services and it may also be ensured that the persons engaged for above work have sufficient knowledge / caliber to execute the work efficiently.

4. The Hononrarium may be paid at the following rates :

i) For Assessment with HHD - Rs.3/- per SC

ii) For collection and remittence - Rs. 1.50 per SC

sd/-dt.14.5.2012.

DIRECTOR (FINANCE) / TANGEDCO.

# மின்வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளியாக பணியாற்றி ரூ. 120/-ஐ தினக்கூலியாக பெறுபவர்களுக்கு வருங்கால வைப்பு நிதி சந்தா (சி.பி.எஸ் சந்தா) தொகை பிடித்தம் செய்யவகை செய்யும் வாரிய உத்தரவு

**::TAMILNADU GENERATION & DISTRIBUTION CORPORATION::**

**(ABSTRACT)**

Provident Fund - Effecting the recovery of employees contrubution under Contributory Pension Scheme (CPS) of arround 4,000 Contract Labourers who have been directly engaged by the Board (now TANGEDCO) - Approval accorded - Orders - Issued.

## (ADMINISTRATIVE BRANCH)

(Per.) FB TANGEDCO — Dated : 05.05.2012

Proceedings No. : 6 — Nandhana Aandu, Chithirai : 23

Thiruvalluvar Aandu : 2043

READ:

1. Per. B.P. (FB) No. 44 (Adm. Br.) dt. 06.09.07
2. Per B.P. (Ch) No.9 (Adm. Br.) dt. 09.01.08
3. Chief Engineer / Personnel's Memo No. 012267/G.58/G.582/2008-1 Dt.: 20.02.2008

**PROCEEDINGS:**

The Board has absorbed 21,600 Contract Labourers in terms of 12(3) settlement reached between the Management and Unions vide B.P. (1) read above.

2.0. Orders were issued to examine the claims of those Contract Labourers who have worked continuously and not covered by 12(3) settlement in which a commitee has been constituted in this regard vide B.P. (2) read above.

3.0. Also, orders were issued by this office vide memo (3) read above, that the Contract Labourers who have worked continuously and not covered by 12(3) settlement and those Contract Labourers who have obtained orders from the Inspector of Labour but pending in W.P.s/W.A.s may be continued to be engaged continuously on need basis on daily wages of Rs. 120/- for which payment may be made directly by the Board.

4.0. As per the orders issued under reference third cited it is learnt that about 4,000 Contract Labourers have been engaged by the Board.

5.0. Further, the Board has been restructured as three entities w.e.f. 01.11.2011 vide G.O. Ms. No. 100 dated 19.10.10. However, these 4,000 Contract Labourers have been engaged prior to the formation of entities. Previously C.P.S. has been implemented to the Contract Labourers who have been absorbed as per 12(3) settlement.

6.0. Accordingly, the TANGEDCO has approved the proposal for recovery of C.P.S. from the Contract Labourers who are engaged by the Board directly on daily wages @ Rs.120/- per day.

7.0. Hence, it is hereby ordered that the subscription for C.P.S. (Contrubutory Pension Scheme) may be recovered from the Contract Labourers engaged on daily wages @ Rs.120/- per day w.e.f. 01.05.2012.

8.0. The Superintending Engineers are directed to implement the recovery of Contributory Pension Scheme immediately.

9.0. The receipt of this B.P. should be acknowledged.

(By ORDER OF THE BOARD)

SD/- 05.05.2012
(S. SYED LIYAKATH)
CHIEF ENGINEER/PERSONNEL

## 2009ல் வேலையில் சேர்க்கப்பட்ட ITI தொழிலாளர்களின் முதன்மைப் பட்டியல் தயாரித்திட வழிகாட்டு குறிப்பாணை

## Memo. No. 100718/583/G57/G572/2012, Dated 26.03.2012

Sub : Recruitment - ITI Helper Direct Recruitment 2009 - Selection of 4000 ITI Helper in two batches - Fixing of Seniority - Instructions - Intimation - Reg.

Ref : 1. (Per.) B.P. (FB) No. 40, dated 14.12.2005

2. (Per.) B.P. (FB) No. 8, dated 2.6.2009

3. This Office Lr. No. 100459/265/G57/G572/2009, dated 28.2.2009

4. This Office Lr. No. 100459/265/G57/G572/2009, dated 3.6.2009

The B.P.'s and letters under reference cited, orders were issued for the Selection of 4000 ITI NTC/NAC Helper (Trainee) by Direct Recruitment through Employment Exchange at a consolidated pay of Rs.2500/- for two years in the training period and after successful completion of training, they will come under the regular time scale of pay.

2. The Seniority of the 4000 ITI Helper (Trainee) should be assigned taking into account based on the date of issue of the Selection Order (i.e.) 28.02.2009 and 03.06.2009 respectively.

3. The 2500 ITI Helper (Trainee), who were appointed on 28.02.2009 in the first batch should be kept as first in the Seniority and the 1500 Helper (Trainee) appointed on 03.06.2009 in the second batch are to be kept below to the first batch. The Seniority is purely based on the Commercial Roster and fixed in the Selection List.

4. The copy of the Selection list of 4000 ITI Helpers in Communal Roster wise is sent through E-mail to the Chief Engineers and all the Superintending Engineers concerned for fixing of Seniority (i.e.)

First Batch : Sl.No. 1 to 2500
Second Batch : Sl.No. 2501 to 4000

5. The Superintending Engineers concerned are instructed to maintain the above Seniority strictly and proper manner.

6. Receipt of this Memo. Should be acknowledged.

**S. Syed Liyakath**
Chief Engineer / Personnel

## தனியார்மயமாக்கலுக்கு எதிராக உத்தரபிரதேச மாநில மின் வாரிய ஊழியர்கள் போர்க்கோலம்

உத்திர பிரதேச மாநிலத் தலைநகரமான லக்னோ உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் மின் விநியோகத்தை தனியார் மயமாக்கும் முயற்சிக் கெதிராக உத்தரபிரதேச மாநில மின் வாரிய ஊழியர்கள் போர்க் கோலம் பூண்டுள்ளனர். மின் வாரிய ஊழியர்களின் இணைப்பு நடவடிக்கைக் குழுவின் அமைப்பாளரான தோழர் சைலேந்திர தூபே, உத்தர பிரதேச மாநில தொழில் அபிவிருத்தி ஆணையர் திரு எ.கே.குப்தா அவர்கள் தலைநகர் லக்னோ உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் மின் விநியோகத்தை தனியார் மின்சார கம்பெனிகளிடம் தாரை வார்க்கப் போகிறோம் என்ற அறிவிப்பை கண்டித்துள்ளார். தலைநகர் லக்னோ மட்டு மல்லாமல். மீரட் நெய்வேலி, வாரணாசி, முஸாபர் நகர், காசியாபாத் மற்றும் ராபார்ட் கஞ்ச் போன்ற மாவட்டங்களில் மின் விநியோகத்தை தனியார் மயமாக்கும் போக்கிற்கு எதிராக கண்டனம் தெரிவித்ததோடு உத்தரபிரதேச மாநிலத்தில் இதற்கு முன் இருந்த அரசு ஆக்ரா மின் விநியோகத்தை தனியார் மயமாக்கியத்தின் மோசமான விளைவுகளையும் சைலேந்திரதூபே தனது கண்டனத்தில் சுட்டி காட்டி உள்ளார்.



# பெண் வரமா? சாபமா?



தஞ்சை தனலெட்சுமி

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்"
- பாரதி

இன்றைக்கு உலகநாடு முழுவதும் கல்வி, விளையாட்டு, அறிவியல், இலக்கியம், அரசியல், இராணுவம் இப்படி எல்லா துறைகளிலும் பெண்களின் பங்கு இருக்கிறது. ஆனால் எண்ணிக் கையில் ஆண்களுக்கு நிகராக இருக்கிறாதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற நிலைமாறி மருத்துவம், பொறியியல் என்று எல்லா கல்வியும் இன்று பெண்களுக்கு இயல் பானதாக இருக்கிறது. இருப்பினும் சதவிகித அடிப் படையில் பார்த்தால் பல நாடுகளில் பெண்களின் படிப்பறிவு என்பது வெறும் 20% மட்டுமே

**பெண்கள் நிலைமை**

சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையான கருத்து சுதந்திரம், கல்வி சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் இன்றுவரை முழுமையாக பெண்களுக்கு கிடைக்கவில்லை. பல்வேறு தடைகளையும், பல களைகளையும் தாண்டித்தான் பெண் சாதனைபுரிய வேண்டியுள்ளது.

பெண்கள் இரவு வேலைக்கு போகலாமா என்பதில் தொடங்கி இந்த கணினியுகத்திலும் பெண்களை இரண்டாம் பட்சமாக பார்க்கும் போக்கு நீடிக்கிறது. பணியிடங்களில் பெண்கள் மீதான பாலியில் அத்து மீறல்கள் தொடர்ந்து நடக்கின்றன.

சமீப காலங்களில் பல இடங்களில் பள்ளிகளில் வண்ணத்துப்பூச்சிபோல் அழகாய் சுற்றிவரும் குழந்தைகள் மீதான பாலியல் வக்கிரங்கள் அதிகரித்து வருகிறது. ஆசிரியரே மாணவிகளிடம் தவறாக நடந்து கொள்வது பல பள்ளிகளில் நடைபெறுகிறது. எனவே பணியிடங்களில் மட்டுமல்ல பள்ளிக்கூடங்களிலும் பாலியல் வன் முறைகளில் இருந்து பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது.

**சட்ட பாதுகாப்பு**

உன்னதமான ஒரு சமுதாயத்தை படைக்க வேண்டுமானால் பெண்கள் வெறும் உற்பத்தி கருவிகள் என்ற நிலை இருப்பதை ஒழிக்க வேண்டும். - என்றார் மார்க்ஸ் எங்கெல்ஸ்

நாட்டில் அன்றாடம் பெண்கள் எதிர் கொள்ளும் பாலியல் சீண்டல்கள் வயது வித்தியாச மின்றி நடைபெறுகிறது. இதனால் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்படும் நிலை உள்ளது. இந்தியாவில் ஒவ்வொரு மணி நேரத்திலும் 7 பேர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

2010 ம் ஆண்டு கணக்குப்படி 94 ஆயிரம் வன்புணர்ச்சி வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக் கிறது. வெளிவராமல் எத்தனையோ சம்பவங்கள் மூடி மறைக்கப்படுகின்றன. கடுமையான பாதிப்புக்கு ஆளாகின்றவர்களில் பெரும்பகுதி ஏழைகளாகவும், ஒடுக்கப்பட்ட பிரிவை சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். உரிய பாதுகாப்பை உத்திரவாதப்படுத்த பணியிடங் களில் பெண்கள் மீதான பாலியல் அத்துமீறல் தடுப்பு மற்றும் குறைதீர்ப்பு சட்டதிருத்த மசோதா நிறைவேற வேண்டும்.

ஏற்கனவே நாடாளுமன்றத்தில் பெண் களுக்கு 33% இட ஒதுக்கீடு மசோதா பல ஆண்டு களாக அறிமுக நிலையிலேயே இருக்கிறது. எப்பொழுது பெண்களை பாதுகாக்கும் சட்டங்கள் எழுத்தில்மட்டுமல்லாமல் பாதுகாப்பு கவசங்களாக நடைமுறைக்கு வருகிறதோ அன்றுதான் பாதுகாப்பு சட்டங்கள் பெண்களை பாதுகாக்கும்.

**சாதனைப் பெண்கள்**

பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா

-பாரதி

பெண்கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் தான் டாக்டர் முத்துலெட்சமி தமிழகத்தின் முதல் பெண் மருத்துவரானார். நமது தேசியக் கொடியை முதலில் வடிவமைத்தது காமா என்ற பெண்மணிதான் . விடுதலை போராட்ட காலத்தில் போராடி சிறை சென்றவர்களில் 6ல் ஒருவர் பெண் என்பது பெருமைப் பட வேண்டிய ஒன்று.

ஏன் அண்மையில் இந்தியப் பெண் விண்வெளி வீராங்களை சுனிதா வில்லியம்ஸ் 2வது முறையாக விண்வெளிக்கு சென்றார் அடுத்த 4 மாதங்களுக்கு விண்வெளியில் தங்கியிருக்கும் இவர் 30 க்கும் மேற்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளார். கடந்த முறை அவர் 6 மாதம் விண்வெளியில் தங்கி ஆய்வு மேற்கொண்டார். எனவே 195 நாட்கள் விண்வெளி பயணம் மேற்கொண்ட முதல் பெண் என்ற சாதனையை சுனிதா பெற்றுள்ளார்.

இப்படி ஒரு சில சாதனைகள் நடக்கின்றது இந்த சாதனைகள் செய்வோர் ஒட்டுமொத்த பெண்களில் 5% பேர்கள் மட்டுமே. மீதி உள்ள 95% பெண்கள் பின்தங்கிய நிலையில்தான் உள்ளனர். சவுதி அரேபியாவில் பெண்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்க தடை உள்ளது.

**பெண் படும் வேதனைகள்**

பெண்களுக்கு எதிராக நாடு முழுவதும் நடக்கும் குற்ற செயல்களில் சராசரி அளவு 18.9% ஆகும். பல காவல் நிலையங்களில் பெண்கள் பாலியல் கொடுமைக்கு ஆளாகிறார்கள். வேலியே பயிரை மேயும் நிலை. பல காவல் நிலையங்களில் நடக்கின்றது. காவிகட்டிய பல சாமியார்கள் பெண்களின் கற்பை களவாடுகின்றனர்.

செய்தித்தாள்களை பார்த்தால் பயமாக இருக்கிறது. சென்னை கல்லூரி பேராசிரியர் நடராஜன் தன் மனைவிக்கு குளிர்பானத்தில் மது கலந்து கொடுத்து குடிக்க வைத்து மயக்க நிலையில் கத்தியால் குத்தி கொலை செய்திருக்கிறார்.

அசாம் மாநிலத்தில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் 11ம் வகுப்பு படிக்கும் 17 வயது சிறுமியை இரவு கேளிக்கை விடுதி (பப்) ஒன்றில் 30 பேர் கொண்ட கும்பல் சுற்றி வளைத்து மானபங்க படுத்தியுள்ளது. இது இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொடுமை என்னவென்றால் இந்த அதிர்ச்சி சம்பவத்தை உலகம் முழுவதும் இணையதளத்தில் வெளியிட்டும், தொலைகாட்சியில் ஒளிபரப்பியும் மேலும் அதிர்ச்சியை ஊடகங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. இது போன்ற செய்திகளை எப்படி வெளியிடுவது என்ற வரை முறையை அரசு தீர்க்கமாக எடுக்க வேண்டும்.

**பெண் அடிமையல்ல**

பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டில்
மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பே

-பாரதிதாசன்

2006ம் ஆண்டில் ஆசிய விளையாட்டில் இந்தியாவுக்கு தங்கம் பெற்றுத்தந்த தடகள வீராங்களை பிங்கி பிரமணிக் அனைவருக்கும் நினைவிருக்கும். இப்பொழுது அவர் பெண் அல்ல திருநங்கை என்ற சர்ச்சை எழுந்து 25 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டு - மருத்துவ சோதனைகள் என்ற பெயரில் அவரின் அந்தரங்கங்கள் கேள்விக்குறியாகிவிட்டது. மருத்துவர்கள் தன்னை மிருகத்தைப் போல் நடத்தினார்கள் என்று பிங்கி வேதனையுடன் கூறுகிறார். பிங்கி பெண் அல்ல திருநங்கை என்று அறிவிக்க நடத்தப்பட்ட சோதனைகள் அவமானப்படுத்தும் விதத்தில் நடந்துள்ளது. விளையாட்டு போட்டிகளுக்கு வீரர்களை அனுப்புவதற்கு முன்பாக ஊக்க மருந்து சாப்பிட்டார்களா என்பதையும், அவர் ஆணா? பெணா? என்பதையும் தெரிந்த பிறகு போட்டிக்கு அனுப்பவேண்டும் ஆணோ, பெண்ணோ திருநங்கையே அந்தரங்கத்தை கொச்சைபடுத்த யாருக்கும் உரிமையில்லை.

பெண்கள் வெளியே செல்லக்கூடாது, படிக்ககூடாது, போன்ற கட்டுப்பாடுகளை ஆப்கானிஸ் தான், பாகிஸ்தான், ஈராக் உட்பட பல்வேறு நாடுகளில் செயல்படும் தீவிரவாத அமைப்புகள் விதிக்கின்றன. மீறினால் அந்த பெண்களை சுட்டுக் கொல்வது பொது இடத்தில் சவுக்கால் அடிப்பது போன்ற தண்டனைகள் வழங்குவார்கள்.

தீவிரவாத அமைப்பு போன்ற கட்டுப்பாட்டை உத்தரவிபிரதேசத்தில் உள்ள அசாரா கிராமத்தில் உள்ள பஞ்சாயத்தும் பிறப்பித்துள்ளது. அவை பெண்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லும் போது தலையில் முக்காடுபோட்டு செல்ல வேண்டும். கிராமத்தை சேர்ந்த யாரும் காதல் திருமணம் செய்யக்கூடாது, 40 வயதுக்கு உட்பட்ட பெண்கள் கடைகள் மற்றும் வெளியிடங்களுக்கு தனியாக செல்லக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளனர்.

அதே போல்தான் உத்தரபிரதேசத்தில் உள்ள முசாபர் நகர கிராமத்தில் நடந்த பஞ்சாயத்து

கூட்டத்தில் பெண்கள் ஜீன்ஸ் அணியக்கூடாது, செல்போன் பயன்படுத்தக்கூடாது என்று தடை செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் உத்தர பிரதேசத்தில் ஆணாதிக்கத்தின் உச்சத்தில் பெண்கள் பாலின ரீதியாக ஒடுக்கப்படுவது திட்டமிட்டே நடைபெறுகிறது. பெண்கள் அமைப்புகள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் நாடு சுதந்திரம் பெற்று 64 ஆண்டுகளுக்குப் பிறகும் இது போன்ற உத்தரவு வருவது கண்டிக்கத்தக்கது.

பெண்களின் சுதந்திரத்தில் தலையிடும் இதுபோன்ற பஞ்சாயத்து தீர்ப்புகளை எதிர்த்து அனைத்து மகளிர் அமைப்புகளும் போராட தயாராக வேண்டும்.

மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம். - என்ற பாரதியின் வரிகளுக்கு உயிர் கொடுக்க வேண்டும்.

பெண் என்பவள் சாதிக்க பிறந்தவள், உறுதிமிக்கவள் ஜான்சிராணிபோல், போரிடத் தெரிந்தவர்கள், தடைகளை மீறி முன்னேற பழக வேண்டும், பெண்கள் அனைவரும் தொழிற்சங்க இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். பெண்களுக்கு எதிராக அநீதிகள் நடைபெறும் பொழுது பார்வையாளராக இல்லாமல் போராட்டத்தில் பங்கேற்பவர்களாக மாற வேண்டும்.

பெண்கள் தன்னம்பிக்கை வளர்க்க வேண்டும், தலைவர்களாக, முடிவெடுப்பவர்களாக தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும், புறக்கணிக்க முடியாத சக்தியாக முன்னேற வேண்டும் பெண் என்பவள் வரமா? சாபமா? என்ற கேள்விக்கு சாபத்தை சாம்பலாக்கி பெண் என்பவள் வரம்தான் என்று உறுதியுடன் சபதமேற்போம், சாதிப்போம்.

# பணியிடப் பெண்களை பாதுகாப்போம்

பணியிடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு எதிராக மின்வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு செயல்படுகிறது. அண்மையில் காஞ்சி மின் திட்டத்தில் நிர்வாக மேற்பார்வையாளராக பணியாற்றும் ஒருவர் இளநிலை உதவியாளராக பணியாற்றும் ஒரு பெண்ணிடம் பாலியல் உணர்வோடு பேசியுள்ளார்.

காஞ்சி மின் திட்டம் - திருவள்ளூரில் இளநிலை உதவியாளராக பணியாற்றும் ஒரு பெண் வீடுகட்டும் கடன் வேண்டி விண்ணப்பித்து இருந்தார். வீடுகட்டும் கடன் சம்மந்தமான விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் நிர்வாக மேற்பார்வையாளர் வீடுகட்டும் கடன் உடனே பெற வேண்டுமானால் தான் சொல்லும்படி நடக்க வேண்டும் என்று பாலியல் உணர்வோடு பேசி அந்த பெண்ணை மனரீதியாக காயப்படுத்தியபோது பாதிக்கப்பட்ட பெண் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு தகவல் தெரிவித்தார்.

நேரிலும், தொலைபேசியிலும் பாலியல் உணர்வோடு தகாத வார்த்தைகள் பேசிய நிர்வாக மேற்பார்வையாளரை உடனடியாக ஊர்மாற்றம் செய்ய வேண்டும். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மின் வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு மின் ஊழியர் மத்திய அமைப்பின் வழிகாட்டுதலோடு காஞ்சி மின் திட்ட மேற்பார்வை பொறியாளரை சந்தித்து கடிதம் கொடுத்து முறையீடு செய்தது.

உழைக்கும் பெண்கள் அமைப்பு தலையிட்ட பிறகும் மேற்பார்வை பொறியாளர் சம்மந்தப்பட்ட நபரை தக்கவைத்துக்கொள்ளவும், பாதுகாக்கவும் நினைத்தார். பிரச்சனைக்குரிய நிர்வாக மேற்பார்வையாளர் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் அந்த பிரச்சனையை போஸ்டர், நோட்டிஸ் தயாரித்து ஊழியர்களை திரட்டி இயக்கத்திற்கு செல்ல வேண்டியிருக்கும் என அறிவுறுத்திய பிறகு சம்மந்தப்பட்ட காஞ்சி மேற்பார்வை பொறியாளர் வேறு வழியின்றி சம்மந்தப்பட்ட நபரை வேறு கோட்டத்திற்கு மாற்றி உத்தரவு பிறப்பித்ததோடு பணிவிடுப்பும் செய்துள்ளார்.

உழைக்கும் பெண்கள் அமைப்பும், காஞ்சி மின் திட்ட கிளையும் எடுத்த நடவடிக்கையின் காரணமாகத்தான் சம்மந்தப்பட்ட நபர் வேறு கோட்டத்திற்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளார்.

இதை தொடர்ந்து பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பு குழுமத்தார் சார்பில் விசாரணையும் நடத்தப்பட்டுள்ளது. மின் வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு மின்வாரியத்தில் எங்கெல்லாம் பெண்களுக்கு பிரச்சனை ஏற்படுகிறதோ அங்கு உடனடியாக சென்று பெண்களை பாதுகாக்கும் பணியை தொடர்ந்து செய்து வருகிறது.

**தஞ்சை தனலெட்சுமி**
மாநில அமைப்பாளர்
மின்வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு

# கேள்வி - பதில்

**கேள்வி**

**ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக தீர்பாய வழக்கு எண் 106 என்ன நிலையில் உள்ளது? இன்னும் சில மாதங்களில் முடியும் அன்று தொழிற்சங்க தலைவர்கள் கூறினார்களே! இப்போதைய நிலை என்ன?**

ஒப்பந்த தொழிலாளர்
திருநெல்வேலி

பதில்

ஒப்பந்த தொழிலாளர் பணிநிரந்தரம் சம்மந்தமான தீர்ப்பாய வழக்கு கடந்த பல வருடங்களாக நிலுவையில் இருந்தது இந்த வழக்கை வேகப்படுத்த வேண்டுமென உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டதில் சென்னை உயர்நீதிமன்றமும் இந்த வழக்கை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்ற வழிகாட்டு தீர்ப்பின் அடிப்படையில் 2010-11 ஆம் ஆண்டுகளில் தீவீர விசாரணை நடத்தப்பட்டு விவாதம் முடிந்து இறுதி தீர்ப்புக்காக காத்திருக்கின்றது. தீர்ப்பு எந்த நேரத்திலும் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கேள்வி**

**2013 இல் வாரியம் கம்பெனி சட்ட திட்டங்களுக்கு மாறிவிடும் என்பதால் ஒப்பந்த தொழிலாளியை வேலைக்கு அமர்த்தும் பேச்சுக்கே இடமில்லை என்ற சில அதிகாரிகள் கூறிவருகிறார்கள் இவை போன்ற வினாக்களுக்கு செங்கொடி இயக்கத்தால் மட்டுமே பதில் அளிக்க முடியும். தங்களின் பதிலுக்கு காத்திருக்கின்றோம்.**

பதில்

மின்சார சட்டம் 2003ஐ பயன்படுத்தி மின் வாரியம் 3 கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது அதற்கான அரசு அறிவிப்பும், வாரிய உத்தரவும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அதை நடைமுறை படுத்தக்கூடாது என செங்கொடி இயக்கம் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்து பேராடி வருகிறது. ஆனால் அரசும், வாரியமும் இதற்கு ஒத்துப்போகும் தொழிற்சங்கங்களுடன் அமல்படுத்த முயற்சித்து வருகிறது. இம்முயற்சி வெற்றி பெறுமானால் தங்களின் சந்தேகம், நிஜமாக மாற வாய்ப்புகள் உண்டு.

மின் வாரியம் கம்பெனிகளாக ஆனாலும் மின் வாரிய பணிகள் என்பது தொடர்ந்து நடைபெறும் தமிழக அரசும் மின்வாரியமும் மனிதச் சுரண்டலை அமல்படுத்த தொடர்ந்து முயற்சிக்கும். ஆனால் மின் வாரியத்தில் உள்ள செங்கொடி இயக்கம் உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக தொடர்ந்து போராடும். இதன் அடிப்படையில் கம்பெனி, சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட கம்பெனி நிறுவனத்திடமும், இந்த நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை செங்கொடி இயக்கம் கையில் எடுக்கும் தொடர்ந்து போராட்டம் இயக்கம் நடத்தும். நிரந்தரத்திற்கான திசை வழி நோக்கி செல்லும்.

## வாங்குவாரின்றி தேசீய அனல் மின் கழகம் உற்பத்தி செய்யும் மின்சாரம்

2011 - 2012 ஆம் ஆண்டுகளில் தேசீய அனல் மின் உற்பத்தி கழகம் உற்பத்தி செய்த 16107 மில்லியன் யூனிட் உபரி மின்சாரம் வாங்குவாரின்றி கிடந்தது. ஏனெனில் மின்பகிர்வில் உள்ள கட்டுபாடுகளும், இக்கழகத்தின் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரம் அதிக விலையாக இருப்பதனால் இதன் மூலம் தயாரிக்கும் மின்சாரத்தை கொள்முதல் செய்வதில் தயக்கம் உள்ளது.

2011 - 12 ஆம் ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் மூலம் உற்பத்தி என்பது 13 பில்லியன் யூனிட் மின்சாரம் குறைவாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இந்திய நாடு முழுவதும் மின்சார பற்றாக்குறை இருந்த போதிலும் இந்த நிறுவனத்தில் மின் உற்பத்திக்காக பயன்படுத்தும் எரி பொருளினால் ஏற்படும் கூடுதல் விலையினால் இந்த நிறுவனத்திடமிருந்து மின்சாரத்தை பெறுவது என்பது மிகவும் குறைந்துவிட்டது. மேலும் இந்நிறுவனம் உற்பத்தி செய்யப்படும் 16.107 பில்லியன் யூனிட்டுகளில் 10 பில்லியன் யூனிட்டுகள் எரிவாயுவை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதாகும். இந்தியாவில் உள்ள மின்சார உற்பத்தியில் பெரும்பான்மை பங்கு வகிப்பது நிலக்கரியும், எரிவாயு ஆகும். உள்நாட்டு சந்தையில் கிடைக்கும் எரிபொருளை பயன்படுத்துகிறபொழுது இதன் விலை சற்று குறைவாகவும் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளை பயன்படுத்தும் போது மின்சார உற்பத்தி விலை கூடுதலாகவும் உள்ளது.

## மின்வாரியத்தில் உள்ள கள உதவியாளர் காலி பணி இடங்களை நிரப்புகின்ற வகையில் ஐ.டி.ஐ. படித்தவர்கள் 4000 (எலக்ட்ரிசியன் - வயர்மேன்) -பேர்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்ய வகை செய்யும் வாரிய உத்தரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD**
**(ABSTRACT)**

**Recruitment - Class IV Service - ITI Helper (Trainee) - NTC/ NAC Holders - Filling up of 4000 Vacancies of Helper (Trainee) by Direct Recruitment through Employment Exchange - Approval accorded.**

**(Administrative Branch)**

**(Per.) FB TANGEDCO Proceedings No.14** **Dated: 12.07.2012**
**Aarti-28, Srinandhana Andu.**
**Thiruvalluvar Aandu 2043**

**Extract from the minutes of the 25th Meeting of the TANGEDCO held on 30.05.2012**

PROCEEDINGS:-

In TANGEDCO, the post of ITI Helper (Trainee) is an intial level post in RWE category. Due to large number of vacancies of Helpers, the Superintending Engineers are finding it very difficult to attend the day to day works in the Section offices and the TANGEDCO Could not render satisfactory service to the large number of consumers with such a large number of vacancies in the basic level category. The Hon’ble Justice Khalid Commision, Hon’ble High Court / Madras have Ordered that after complying with the report of justice Khalid Commission, the TANGEDCO shall make appointment to the post to ITI Helper (Trainee) Which is an initial level category.

2) Accordingly the TANGEDCO hereby approved the following orders:-

a) 4000 ITI Helper (Trainee) with NTC/NAC (ITI) qualification in the trade of Electrician and Wireman be appointed by Direct Recruitment through Employment Exchange, to minimize the large number of Helper Vacancies in TANGEDCO. The 4000 ITI Helper (Trainee) will be given 2 years training with thr Consolidated pay of Rs. 3250/- per month and after completion of training they will come under the regular pay band of Rs. 5400-20200 + 1900 (Grade pay).

b) Considering the large number of persons to be recruited within the short span of time and that the fact the recruitment is of the lowest level category in TANGEDCO, the Board directs that there may not be any need for interview expecting for testing their job fitness criteria. Hence the TANGEDCO directs that a list may be drawn from the employment exchanges and all eligible candidates subjects to their physical fitness required for the job specification, be recruited duly following other rules and regulations in force, so as to improve field level perfomance of the TANGEDCO.

c) An amount of Rs.250/- (Rupees Two hundred and fifty only) towards non refendable Application fees for interview be collected from the OC/BC/MBC/DC Candidates. The SC/ST Candidates be excepted from payment of Application Fees.

(BY ORDER OF THE TANGEDCO)

**SYED LIYAKATH**
CHIEF ENGINEER/ PERSONNEL

# அனல் மின் நிலையங்களில் தேர்வு நிலை களஉதவியாளராக பணியாற்றும் ஊழியர்களுக்கு சூப்பர் நியூமரரி பிட்டர் இரண்டாம் நிலையாக பதவி உயர்வு வழங்க வகை செய்யும் வாரிய உத்தரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD**
**(ABSTRACT)**

**TANGEDCO - Promotional avenues in Thermal Stations - Settlement with Unions under Section 18 (1) of the Industrial Disputes Act 1947 - Upgradation of Selection Grade Field Assistants (Selection Grade Helpers) a Supernumerary Fitter Gr. II - Orders - Issued.**

**(SECRETARIAT BRANCH)**

**(Per.) FB TANGEDCO Proceedings No.28** **Dated: 11 th May. 2012**

**READ :**

1. Settlement under Section 18 (1) of the Industrial Disputes Act secured with Unions dt. 26.3.2012
2. (Per) FB TANGEDCO Proceedings No.18 (SB) Dated : 3-4-2012
3. Minutes of 24th Meeting of the TANGEDCO held on 23-4-2012

**PROCEEDING:**

In the reference second cited, order have been issued implementing Promotional Avenues to the Regular Work Establishment employess in Thermal Stations based on the Settlement entered into between the Unions and the TANGEDCO, Dated : 26-3-2012 under Section 18(1) of the Industrial Disputes Act 1947. In the said order, it has been ordered, among other things, that upgradation of the Selection Grade Helper a Supernumerary Fitter Gr. II will be considered. The above demand of upgrading the Seletion Grade Field Assistants (Selection Grade Helpers) as Supernumerary Fitter Gr. II was placed before the Meeting of the TANGEDCO Board held on 23-4-2012 and approved.

2) Accoringly, it is hereby ordered that the Selection Grade Field Assistants (Selection Grade Field Helpers) who are remaining without promotion to the next level of wireman equivalent categories in all the four Thermal Power Stations consequent on the revised Regular Work Establishment staff strength as ordered in the reference second cited will be upgraded as Supernumerary Fitter Gr. II as a special case. They shall be allowed fixation of pay in the pay Band of Wireman i.e. Rs. 5400 - 20200 + Rs. 2200/- Grade Pay with promotional benefit. They will be accommondated in the regular posts of wireman equivalaent categories as and when regular vacancies arises. The Supernumerary Fitter Gr.II posts held by them will be automatically downgraded as Field Assistant on their regular promotion. They are not entitled for fixation of pay on their regular prrmotion in the Wireman equivalent categories.

3) The receipt of the Board's Proceedings shall be acknowledged.

(BY ORDER OF THE BOARD)

**S. PASUPATHI**
SECRETARY

# தூத்துக்குடி மின்விநியோக வட்டத்தில்

## மின்வாரிய உழைக்கும்பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு உதயம்

தூத்துக்குடி மின்விநியோக வட்டத்தில் பணியாற்றும் பெண் ஊழியர்களை திரட்டி உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவை அமைக்க வேண்டும்என்ற அடிப்படையில் 21.7.2012 அன்று அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் மின்வாரியத்தில் பணியாற்றும் பல பிரிவு ஊழியர் களும் கலந்து கொண்டனர்.

உழைக்கும் பெண்கள் அமைப்புக் கூட்டத்திற்கு அத்திட்ட த்தில் பணியாற்றும் வருவாய் மேற்பார்வையாளர் தோழர் எஸ். சீத்தாம்மாள் அவர்கள் தலைமை தாங்கினார். அமைப்புக் கூட்டத்திற்கு வந்திருந்த வர்களை அத் திட்டத்தில் பணியாற் றும் மற்றொரு வருவாய் மேற்பார் வையாளரான தோழர் ஜி. நாகலட்சுமி அவர்கள் வரவேற்று பேசினார்.

உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் நோக்கத் தை பற்றி மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவர்களில் ஒருவரான தோழர் வை. பாலசுப்பிர மணியன் அவர்கள் விளக்கி சிறப்புரை ஆற்றினார்.

அமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெண் தொழிலா ளர்கள் தங்களது பணியிடத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகள், குறிப்பாக கணக்கீட்டு பிரிவுஊழி யர்கள் அவர்கள் சுமக்கும் வேலை பளு சம்மந்தமாகவும், எழுது பொருள் கள் போதிய அளவிற்கு கிடைக்காத தையும் குறிப்பிட்டு இவைகளுக்கு தீர்வு காண வேண்டுமென விவாதத் தில் பேசினார்கள். மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பகுதி நேர ஊழியர்கள் தங்களது குறைகளை எடுத்துச் சொல்லிய தோடு, நீதிமன்றத் தீர்ப்பை முழுமையாக அமல்படுத்துவதற்கு உழைக்கும் பெண்கள் ஒருங் கிணைப்புக் குழுவும் மத்திய அமைப்பும் முயற்சிக்க வேண்டு மென கேட்டுக் கொண்டனர்.

ஊழியர்கள் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளிக்கப் பட்டது.

அமைப்புக் கூட்டத்தில் மின்வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் மாநில துணை அமைப்பாளர் தோழர் எம்.சாலட் அவர்கள் கலந்து கொண்டு தமிழக மின்வாரியத்தில் உழைக்கும் பெண்கள் ஒருங் கிணைப்புக்குழு அமைக்கப்பட்டு அது கடந்த காலங்களில் ஆற்றிய சாதனைகளை விளக்கியதோடு, மாறிவருகின்ற சூழ்நிலையில் மின்வாரியத்தில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் ஸ்தாபன விர்வாக்க அவசியத்தை விளக்கினார். அது தவறுதலான எண்ணத்தோடு அணுகிய பிரச்சனையை மின்வாரிய உழைக்கும் பெண்கள் கையி லெடுத்து பிரச்சனைக்குரிய ஊழி யரை இடமாற்றம் செய்ததையும் விளக்கினார்.

நிறைவாக மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் அவர்கள் மின்வாரிய ஊழியர்களின் ஊதிய உயர்வு பிரச்னை, ஒப்பந்தத்தின் அடிப் படையில் பதவிகளை அனுமதித் தல், மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் பணி நிரந்தரம் மற்றும் பகுதி நேர ஊழியர்கள், கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் பிரச்னைகள் மின்வாரிய பிரிப்பு அதனால் ஏற்பட மட்டுமல்லாமல் மின்வாரிய ஊழியர்கள் சந்திக்கின்ற பிரச்னைகளையும் அவைகளை தீர்த்து வைக்கும் அமைப்பாக உழைக்கும் பெண்கள் ஒருங் கிணைப்புக்குழு செயலாற்றிக் கொண்டுள்ளதையும் விளக்கினார்.

மேலும் சமீபத்தில் கூட காஞ்சி மின்திட்டத்தில் மத்திய அலுவலகத்தில் பணியாற்றும் ஒரு பெண் ஊழியரிடம் அங்கு பணி யாற்றும் ஒரு சக ஆண் ஊழியர் உள்ள இழப்புகளையும் மற்றும் புதிய பென்சன் திட்டம் அதன் பாதகமான அம்சங்களையும் விளக்கி இவைகளுக்கு எதிராக மின்வாரிய ஊழியர்கள் திரள வேண்டிய அவசியத்தையும் விளக்கினார்.

இறுதியாக தோழர் எஸ். சீத்தாம்மாள் அவர்களின் நன்றி யுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

தொகுப்பு - **எம். சாலட்**
மாநில துணை அமைப்பாளர்

### புதிய அமைப்புக்குழு

**அமைப்பாளர்**
ஜி. நாகலட்சுமி, Revenue Supervisor

**துணை அமைப்பாளர்கள்**
எஸ். சீத்தாம்மாள், Revenue Supervisor
ஆர். ராணி, Helper -

**குழு உறுப்பினர்கள்**
எஸ். கோமதி, Asst
கே. கிருஷ்ணம்மாள், Asst
எம். பன்னீர்செல்வம், IA
கே. காசியம்மாள், Helper
எல். கோகிலாம்மாள், Maistry Civil
செல்வஜானகி, Part Time Worker
மாரியம்மாள், Part Time Worker

# புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2012 தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அமல்படுத்த வாரியம் வெளியிட்டுள்ள உத்தரவு நகல்

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD**

Secretariat Branch,
144, Anna Salai,
Chennai - 2

**Memorandum (Permanent) No. 050444/A17/A171/2012-1, dated 17.7.2012.**

Sub : Medical Aid - New Health Insurance Scheme, 2012 for employees of Government, Local Bodies, Public Sector Undertakings, Statutory Boards and State Government Universities, etc. - Implementation of the Scheme from 1-7-2012 - Certain Instruction - Issued - Regarding..

Ref : 1. (Per.) B.P. (Ch) No. 89 (SB) dated 21.5.2008.

2. G.O. Ms. No. 243, Finance (Salaries) Department, dated 29.06.2012.

3. From Commissioner of Treasuries & Accounts Letter Rc.No. 17705/2012/NHIS dated 09.07.2012

In the reference second cited, the Government have issued orders, for implementation of the New Health Insurance Scheme, 2012 through the United India Insurance Company Limited from 01.07.2012 to provide health care assistance to the employees of Government, Local Bodies, Public Sector Undertakings, Statutory Boards and State Government Universities etc. including their eligible family members.

2. As per the orders of the Government, the employees and their eligible family members covered under the scheme shall avail assitance upto the limit of Rupees Four Lakhs in a block period of four years from 01.07.2012 tp 30.6.2016 on a CASHLESS model for the approved treatments and surgeries in the hospital approved by the Insurance company. As per the orders of the Government, the enrolment of the employees under the New Health Insurance Scheme, 2012 is compulsory. The monthly subscription under the New Health Insurance Scheme, 2012 is Rs.150/- per month per employee for the month of July 2012 onwards.

3. As per the orders of the Government the employees drawing pay in regular time Scales of pay and Special Time Scales of pay are covered under the New Health Insurance Scheme, 2012. The employees working on Consolidated pay / Fixed Pay / Honorarium, b) Daily Wages, c) Contract basis, d) Rc-employment are not covered under this scheme.

4. For the implementation of the New Health Insurance Scheme, 2012 following Instruction have been issued by the Commissioner of Treasuries and Accounts, Chennai :

i. The insurance Company / Third Party Administrator will provide the data forms generated using the existing data in the prescribed format as in Annexure VII to the respective pay Drawing Officers of the Organisations covered under the scheme for the employees already having the Identity cards and having Unique Reference Number but not having identity cards and the same will be supply as and when received from the Insurance Company.

ii. The Pay Drawing Officers shall in turn distribute the above said generated data forms to their employees for furnishing the latest details by the employees.

iii. Each employee shall furinsh the latest details with any addition and deletion with the recernt passport size photograph of each family member to be affixed in the prescribed form distributed to them.

iv. The pay Drawing Officers shall collect the updated forms from their employees. The updated forms shall be verified, countersigned and a copy of the same shall be maintained by the pay Drawing officer before sending it to the Insurance Company / Third Party Administrator for issue of new identity cards on or before 31.7.2012.

v. The Pay Drawing Officer shall provide the blank forms in the Prescribed format as in Annexure VII for the newly recruited or absorbed employees in service and employee who has not furnished the details of the eligible family members and unique reference number not obtained so far. The filled up

forms shall be verfied, countersigned and a copy of the Same shall be maintained by the Pay Drawing Officer before sending it to the Insurance Company / Third Party Administrator for issue of new Identity cards on or before 31-7-2012.

vi. The new identity cards will be distributed to the employees through the pay Drawing Officer with due acknowledgement.

vii. If the spouse is covered under the term ‘Employee’. The total assistance for the family will be limited to Rupees Four lakh only. In such cases, the employee’s contribution shall be recovered from only one of the employees as per the option exercised in this regard. (From the younger of the two). A seprate form may be furnished with the details of the spouse in the same format in case of the spouse being employed within anyone of the departments / Organisations covered under the scheme.

viii. Instuct all the employees eligible under New Health Insurance Scheme, 2012 recent passport size photograph of each Family members readily available with them so as to affix in the prescribed format.

5. All the Pay Drawing Officers shall arrange to recover the employee’s contribution under New Health Insurance Scheme, 2012 at Rs.150/- per month from the Salary of July, 2012 onwards.

6. During the interim period of preparation and distribution of the New Idenity Cards, the Insurance Company / Third Party Administrator shall authorise acceptance of the Identity Cards already issued under the Scheme for 2008 - 2012 for time being i.e. upto 30.9.2012. Therefore for taking treatment urgently please contact the Toll Free Helpline No. 1800 233 5666 of the United India Insurance Company Limited / Third Party Administrator of Insurance Company.

7. All the Chief Engineers / Superintending Engineers are requested to take action on warfooting basis.

8. The receipt of the Memo. Should be acknowledged.

(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)

**A.S. PASUPATHI**
SECRETARY

## “புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்2012” வாரியம் வெளியிட்ட உத்தரவில் சில மாற்றங்கள்கோரி மத்திய அமைப்பு தெரிவித்த கருத்துக்கள்

பெறுநர்
**செயலாளர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

நாள்: **23.7.2012**

ஐயா,

பொருள் : பணியமைப்பு - மருத்துவ உதவி -புதிய மருத்துவ காப்பீடு திட்டம் 2012 - உத்தரவில் சில மாற்றங்கள் கோருவது - சம்மந்தமாக.

பார்வை : 1) கு.ஆ. எண் (நிரந்தரம்) 50444/ஏ17/ஏ171/2012 - 1/ நாள். 17.7.2012.

தமிழ்நாடு மின் வாரியத்தில் பணியாற்றும் மின்வாரிய ஊழியர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கும் வகையில் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அறிவித்துள்ளதில் சில மாற்றங்கள் கோருவது சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

தமிழக அரசு அதன் துறையில் உள்ள அலுவலர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2012 என்ற மருத்துவ உதவி திட்டத்தை அறிவித்துள்ளது. தமிழக மின்சார வாரியமும் அரசு அறிவித்த புதிய மருத்துவ நலன் காப்பீட்டு திட்டம் 2012 ஐ வாரியத்தில் அமல்படுத்துவதற்கு உரிய உத்தரவினை பிறப்பித்துள்ளது.

தமிழக அரசும் அதையொட்டி மின்சார வாரியமும் தங்களது ஊழியர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கும் வகையில் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் 2012 ஐ அறிவித்து அதை பராமரிக்கின்ற பொறுப்பை மத்திய

பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இன்டியா இன்சுரன்ஸ் கம்பெனியிடம் அளித்துள்ளது, சென்ற அரசு தனது ஊழியர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கும் திட்டத்தை ஸ்டார் ஹெல்த் இன்சுரன்ஸ் என்ற தனியார் நிறுவனத்திடம் அளித்ததைப்போல் அல்லாமல் இப்போது ஆளுகின்ற அரசு இந்த புதிய மருத்துவ உதவி திட்டத்தை மத்திய பொதுத்துறை நிறுவனத்திடம் அளித்துள்ளதை மத்திய அமைப்பு வரவேற்கின்றது. மேலும் இத்திட்டத்தின் மூலம் பலன் பெறும் தொகை ரூபாய் 2 லட்சத்தில் இருந்து ரூபாய் 4 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதே சமயத்தில் அரசும் வாரியமும் அறிவித்துள்ள திட்டத்தில் கீழ்காணும் மாற்றங்களை செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

1) அரசும் வாரியமும் அறிவித்துள்ள புதிய மருத்துவ காப்பீட்டும் திட்டம் 2012க்கு மருத்துவ காப்பீட்டு பிரிமிய தொகையாக மாதத்திற்கு ரூபாய் 150/- செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்சமயம் நடைமுறையில் உள்ள மருத்துவ காப்பீட்டுத் திட்டத்துக்கு சந்தாவாக ரூ. 25/- மட்டுமே செலுத்தி வருகிறோம். பழைய பிடித்த தொகையோடு ஒப்பிட்டுபார்க்கும் போது புதியதாக அறிவித்துள்ள பிரிமியத் தொகை 6 மடங்கு உயர்த்தி அறிவித்துள்ளது சரியல்ல என்பதை குறிப்பிட்டு பழைய பிரிமியம் தொகையான ரூபாய் 25 வீதம் பிடித்தம் செய்வது என்பது தொடர வேண்டும்.

2) இத்திட்டத்தின் மூலம் கூடுதல் நோய்களுக்கான சிகிக்சையும் மருத்துவ சிகிச்சை பெறும் மருத்துவமனைகளை அதிகரித்தும் உத்தரவிட்ட போதிலும், பெண்களின் மகப்பேறுவையொட்டி எடுக்கப்படும் சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும்.

3) இத்திட்டம் மின்வாரிய ஊழியர்களுக்கும் அவரது பிள்ளைகளுக்கு பொருந்தும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதில் ஊழியர்களின் தாய் தந்தையர்களையும் சேர்த்திட வேண்டும். ஏனெனில் பொதுவாக இத்திட்டத்தினால் பலன் பெறுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதை கணக்கில் கொண்டும், பெற்றோர்களை பாதுகாப்பது பிள்ளைகளின் கடமை என்பதையும் உணர்ந்து இத்திட்டத்தை அவர்களுக்கும் பொருந்தும் வகையில் மாற்றி அமைத்திட வேண்டும்.

4) இத்திட்டம் ஊதிய விகிதம் பெறும் நிரந்தர தொழிலாளர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று குறிப்பிட்டுள்ளதை மாற்றி தொகுப்பூதியம், பகுதி நேர பணியாளர்கள், தினக்கூலி, ஒப்பந்த முறையில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தை விரிவாக்கம் செய்திட வேண்டும்.

5) ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் மின் வாரியத்தில் பணியாற்றினால் ஒருவருக்கு மட்டுமே பொருந்தும் என்பதை மாற்றி இருவருக்கும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தின் சரத்துகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

எனவே வாரிய செயலாளர் பணியமைப்பு அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து மின்வாரிய ஊழியர்களுக்கு மருத்துவஉதவி, அளிக்கும் வகையில் அறிவித்துள்ள புதிய மருத்துவ நலன் காப்பீட்டு திட்டம் 2012 இல் தேவையான மாற்றங்களை செய்து இத்திட்டத்தின் பலன் அனைத்து பிரிவு ஊழியர்களுக்கும் கிடைக்கும் வகையில் வரிவாக்கம் செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்

## மின் விநியோக கம்பெனிகளின் இழப்பு 2 லட்சம் கோடியை தாண்டியது!

இந்த ஆண்டு மார்ச் இறுதிவாக்கில் மின் விநியோக கம்பெனிகளின் நட்டம் என்பது 2 லட்சம் கோடியை தாண்டியுள்ளது. கிரிஸல் என்ற தனியார் நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி குறைந்த மின் கட்டணம், உயர்ந்து உள்ள எரிபொருள் விலையே மின்வாரிய நட்டத்திற்கு காரணம் என்று கூறி உள்ளனர். வருகின்ற ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 6 % அளவிற்கு மின்சார கட்டணத்தை உயர்த்த வேண்டும். இது போல் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்துவதன் மூலமே மின்வாரியத்தின் நிதி நிலையை சீரடையச் செய்ய முடியுமென்றும் தனது ஆய்வின் மூலமாக வெளிப்படுத்தி உள்ளார்.

ஏற்பட்டுள்ள இழப்பில் நான்கில் 3 பகுதி சென்ற 5 ஆண்டுகளுக்குள்ளாக ஏற்பட்ட இழப்பு இந்த இழப்பீடு என்பது வங்கிகள், நிதி நிறுவனங்களில் கடன் பெறுவதின் மூலம் இந்த இழப்பை ஈடுசெய்யப்படுகிறது என்று கிரிஸ்ல் நிறுவனம் கருத்து தெரிவிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மின் கட்டண உயர்வு மின் வாரியத்தில் ஏற்படும் தொழில்நுட்ப, வணிக ரீதியான இழப்புகளை குறைத்தல் அரசு கொடுக்க வேண்டிய மான்யங்களை முறையாக அளிப்பது இவை போன்ற நடவடிக்கைளே மின் நிறுவனங்கள் முறையாக செயல்படுவதற்கு உதவும் என்று கிரிஸ்ல் தனியார் நிறுவனம் கருத்து தெரிவித்துள்ளது.

## விடுபட்டுபோன ஒப்பந்த தொழிலாளர்கள் பணிநிரந்தரம் சம்மந்தமாக மின்ஊழியர் மத்திய அமைப்பு தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கினையொட்டி பட்டியலில் கண்டவர்களை பணி நிரந்தரம் செய்தவற்கு கள அறிக்கையை கேட்டுப்பெறுவதற்காக வாரியம் மண்டல தலைமை பொறியாளர்களுக்கும், மேற்பார்வை பொறியாளருக்கும் அனுப்பிய கடிதங்கள்

**COURT CASE - IMMEDIATE:**

**TAMIL NADU GENERATION & DISTRIBUTION CORPORATION**
**(Administrative Branch)**

From
Er. S. Syed Liyakath, B.E.,
Chief Engineer/Personnel,
144, Anna Salai,
Chennai 600 002.

To
The Chief Engineer/
Distribution, Transmission and
Project (Erode)

**Letter No 121919/G. 58/G.582/2009, dated 26.06.2012**

Sir,

Sub : Court Case - W.P. No 22100/2009 filed by COTEE before the Hon'ble High Court / madras for adsorption of Contract Labourers - Orders at 16.11.2009 passed by the Hon'ble High Court / Madras - contempt petition filed by the Union - Reg.

Ref : 1 Hon'ble High Court's order dt 16.11.2009 made in W.P. No. 22100/2009
2. Contempt petition No 1338/2010 and 1727/2011 filed by the union - Reg.

I am to inform that the CITU Union has filed a Contempt Petition vide reference (2) cited for absorption of around 4,600 contact labourers at various circles and they have submitted thier proof of records in the form of around 150 books. The above records are to be verified in detail within a short period (i.e) within 15 days time. As it is a voluminous time bound work and in order to **avoid contempt of court,** the verification work is to be seperated and carried out Region wise so as to consolidate and finish quickly.

Hence, the Chief Engineers are requested to depute their staff directly on 29.06.2012 to take up the concerned records and submit their report immediately after / verification on or before 09.07.2012 in person, so as to consolidate and place the report before the committee constituted as per BP (Ch) 9 dated 09.01.2008 and to appraise the position to the Hon'ble High Court on the contempt petition filed by the union. **Since the Chairman cum Managing Director is involved in this Contempt Petition, your personal attention is requested in this regard.**

Yours faithfully
(Sd/-xxxxxxxxxxx)
**S.SYED LIYAKATH**
Chief Engineer / Personnel

## தோழர் பி.சி.வேலாயுதம் நினைவு கல்வி உதவி நிதி

மறைந்ததோழர் பி.சி.வி நினைவாக வருடம் தோறும் மின்வாரியத்தில் பனியாற்றும் ஊழியர்களின் குழந்தைகளில் (10ம் வகுப்பு மற்றும் +2) தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் பிள்ளைகளுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு என்ற அடிப்படையில் கல்வி உதவி நிதி வழங்குவது அனைவரும் அறிந்ததே.

அதே போல் இந்த ஆண்டு (2011-2012) 10ம் வகுப்பு, +2 மதிப்பெண் பட்டியலை வாங்கி கிளைச் செயலாளர் கையொப்பமிட்டு ஆகஸ்ட் 15க்குள் மாநில மையத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

**COURT CASE - IMMEDIATE:**

**TAMIL NADU GENERATION & DISTRIBUTION CORPORATION**
**(Administrative Branch)**

From
Er. S. Syed Liyakath, B.E.,
Chief Engineer/Personnel,
144, Anna Salai,
Chennai 600 002.

To
The Chief Engineer/
Distribution, Transmission and
Project (Erode)

**Letter No 121919/G. 58/G.582/2009, dated 29.06.2012**

Sir,

Sub : Court Case - W.P. No 22100/2009 filed by COTEE before the Hon'ble High Court / madras for absorption of Contract Labourers - Handing over of records to be verified - Reg

Ref : 1 This office Lr. No. 121919/G.58/G.582/2009 Dated 27.06.2012

In continuation to this office letter cited letter under reference, I enclose herewith a format to be filled columnwise after thorough verification of particulars of the individuals covered in the W.P. 22100/2009 with the signature of the Superintending Engineer so as to consolidate and place the report before the committee constituted as per BP (Ch)9 dt. 09.01.08 and to appraise the position to the Hon'ble Court on the contempt petition filed by the union.

It is also to be noted that the particulars of every individual should be filled as per details in the books furnished by the petitioner. Also if any repetitions of the same individual is found it must be mentioned in the special remarks.

Also, the Chief Engineers are once again requested to submit their report immediately after verification on or before 09.07.2012 in person. Since the Chairman cum Managing Director is involved in this Contempt Petition, your personal attention is requested in this regard.

Yours faithfully
(Sd/-xxxxxxxxxxxx)
**(N. THIAGARAJAN)**
SENIOR PERSONNEL OFFICER / LABOUR
for CHIEF ENGINEER / PERSONNEL

Copy to :
All the Superintending Engineers

## மின்வாரியத்திற்கு ரூ. 4024 கோடி தமிழக அரசின் மான்யம் !

2012 – 2013 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகத்திற்கு 4024.96 கோடி ரூபாய் மான்யமாக வழங்குவது என்று முடிவு செய்துள்ளது. இந்த முடிவும் மின் கட்டண உயர்வு அறிவித்த பின்னரே இந்த முடிவை தமிழக அரசு எடுத்துள்ளதாக தெரிய வருகிறது. இந்த மான்யம் சம்மந்தமாக மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையமே முடிவு செய்துள்ளது. தமிழகத்தில் விவசாயிகளுக்கு குடிசைகளுக்கு, இலவச மின்சாரத்தோடு பெரும்பாலான வீட்டு மின் இணைப்புகளுக்கு 1 ரூபாய் முதல் 1 ரூபாய் 60 காசு வரை மான்யம் அளிப்பதனால் வருகின்ற தொகையே 4024.96 கோடி என்று ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ளது.

## FORMAT

| Sl. No. | a) Name of the Individual,<br>b) Father's Name<br>c) Date of Birth,<br>d) Qualification &<br>e) Residential Address | Date of Ist Engage-ment | Period of engagement, as per<br>a) PCB Details<br>b) Certificate issued by Board Officer.<br>c) Certificate issued by contractor | Remarks |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | For Example | | | |
| | a) Thiru...........<br>b) S/O<br>c) 29.06.74<br>d) SSLC<br>e) III Street | 15.06.1997 | a) PCB : 15.06.97 to 01.10.98<br>01.10.99 to 05.03.02<br>b) Board Officer Certificate :<br>01.04.98 to 01.10.99<br>01.10.02 to 05.01.04<br>c) Contractor Certificate :<br>01.01.04 to 01.10.05<br>01.10.07 to 05.01.09 | a) Not working at Rs. 120/-<br>b) Identified as on 08.08.98<br>c) Exgratia Paid from 1998 to 2000<br>d) Yes. IOL - NaKa 3664 / 2008 High Court Case - WP xxx/2008<br>e) Breakage<br>PCB: 02.10.98 to 30.09.99<br>06.03.02 to till date.<br>B.O.Cert:<br>02.10.99 to 30.09.02<br>06.02.04 to till date<br>f) Special remarks:<br>Several breaks - not continuously engaged |

**NOTE:** The remarks column must contain the following details

a) Whether the individual is working now @ Rs. 120/- (Directly paid by Board)
b) Whether identified as on 08.08.98
c) Whether exgratia has been paid (If any furnish details)
d) Whether the individual is covered under IOL / High Court cases (if any furnish details)
e) Details of breakage (Periods must be specified)
f) Special remarks if any. (Departmental electrical / Mechanical accidents also may be specified)

**It is certified that the particulars furnished above were verified as per the records available in the office and found correct**

**SIGNATURE**

**(TO BE SIGNED BY THE CONCERNED SUPERINTENDING ENGINEER)**

### மின் நுகர்வோர்கள் முறையீட்டுக்கேற்ப மண்டல வாரியான மேல் முறையீட்டு தீர்ப்பாயங்கள்

தலை நகராம் டெல்லி அல்லாத இதர மாநிலங்களில் உள்ள மின் நுகர்வோர்கள், மின் விநியோக நிறுவனங்களின் வேண்டுகோளின் அடிப்படையில் நாட்டின் இதர பகுதிகளில் சென்னை, மும்பை, கல்கத்தா போன்ற இடங்களில் மின்சார மேல் முறையீட்டு தீர்ப்பாயங்கள் அமைக்கும் அறிவிப்பினை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இந்த மண்டல வாரியான மேல் முறையீட்டு தீர்ப்பாயங்கள் அமைப்பதின் மூலம் மின் நுகர்வோர்கள் மின் வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவுகளோடு, முறையீட்டு தாவாக்களை தீர்த்துக் கொள்ள பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து டெல்லி மாநகர் வர வேண்டிய அவசியம் ஏற்படாது அதே போல தென் மாநிலங்களில் உள்ள மின் நுகர்வோர்கள் சென்னையில் அமைய உள்ள மண்டல மேல் முறையீட்டு அலுவலகத்துக்கு குறைந்த செலவில் சென்று தங்களது வழக்குகளை தீர்த்துக் கொள்ள முடியும்.

## 2008 இல் புதுச்சேரி மின் வாரியத்தை (பாண்டிச்சேரி மாநிலம்) கழகங்களாக பிரிக்க தயாரிப்பு செய்ய பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து புதுச்சேரி மின் வாரியமாகவே தொடர வகை செய்யும் புதுச்சேரி அரசு உத்தரவு

**GOVERNMAENT OF PUDUCHERRY**

**Abstract**

**Power - Continuance of the Electricity Department, Puduchery without converting into a Corporate Body in the name and style of Puduchery Electricity Supply Corporation Limited (PESCOL) - Orders - Issued**

**INDUSTRIAL DEVELOPMENT (POWER) DEPARTMENT**

**G.O. Ms. No. 14** **Dated: 10/07/2012**

READ : G.O. Ms. No. 31 dated 19.9.2008 of the Industriak Development (Powe) **Department, Pudhucherry.**

**ORDER:**

**In supersession of the in-principle approval of the Government conveyed vide G.O. read above, the Lieutenant Governor, Puducherry is pleased to accord approval for continuance of the Electricity Department, Puduchery without transformation into a Corporate Body in the name and style of Puducherry Electricity Department, Puducherry without transformation into a Corporate Body in the name and style of Puducherry Electricity Supply Corporation Limited (PESCOL).**

-//By Order//-

**N. SUMATHI**

DEPUTY SECRETARY TO GOVT. (POWER)

**மின் வாரிய பிரிப்புக்கு எதிராக போராட்டம் நடத்தி வெற்றி பெற்ற புதுச்சேரி மின்வாரிய ஊழியர்களுக்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

## தனியார்மயத்தை தடுத்து நிறுத்திய அரியானா மின் தொழிலாளர்கள்

மின்வாரியப் பிரித்தல் என்பது தனியார் மயத்திற்கு இட்டுச் செல்லும் என்பதை அரியானா மின் வாரியத்தின் நடவடிக்கை காட்டுகின்றது.

மைய அரசு மின் விநியோகப்பிரிவு தனியாருக்கு கொண்டு செல்ல வலியுறுத்தி வருகின்றது. சமீபத்தில் நடைபெற்ற மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மின் விநியோகத்தை தனியாரிடம் ஒப்படைத்தால் சிறப்பாக இருக்கும். மகாராஷ்டிரா மாநிலத்தில் பிவண்டி பகுதியில் பிரான்சைசஸ் அடிப்படையில் மின் விநியோக நடவடிக்கையில் முன்னேற்றம் கிடைத்துள்ளதை பெருமையாக சுட்டிக்காட்டியது. அதே நேரத்தில் ஆக்ரா, கான்பூர், நாக்பூர் போன்ற பகுதிகளில் பிரான்சைஸ் என்ற முறை தோல்வியடைந்ததைப்பற்றி குறிப்பிடவில்லை.

அரியான மாநிலம் மைய அரசின் வழிகாட்டுதலில் வட தென் விநியோக கழகங்களில் குரகான், பானிபட் நகரங்களில் பிரான்சைசஸ் என்ற முறையை அமல்படுத்த துணிந்தது.

மின் ஊழியர்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக தனியார் மயமாக்குதலை அரியானா அரசு நிறுத்தி வைத்துள்ளது எதிர்வரும் தேர்தலும் காரணமாக உள்ளதையும் கவனத்தில் கொண்டே தனியார்மய எதிர்ப்பை அரியானா அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

கேரள அரசும் மூன்றாகப் பிரித்தலை அமல்படுத்துவதற்கு கேரள அரசின் அமைச்சரவையில் முடிவெடுக்க முடியவில்லை. 31.5.2012 இல் நடைபெற்ற அமைச்சரவையில் கூட்டத்தில் 30.6.2012 இல் கேரள மின் வாரியத்தை பிரிக்க வேண்டுமென்ற முடிவினை எடுக்க முடியாமல் தள்ளி வைத்துள்ளது. இதற்கு காரணம் மின் ஊழிய சங்கங்களும், பொறியாளர் கழகங்களும் அரசின் இத்தகைய முடிவை எதிர்த்து வலுவாக போராட்டத்தில் உள்ளதே காரணமாகும். கேரள முதல்வர் திரு. உம்மன்சாண்டி அவர்களின் விருப்பம் மின்வாரிய பிரிப்பிற்காக இருந்தாலும் வேறு வழியில் லாபம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாநிலத்தின் போராட்டங்கள் தமிழக மின்வாரிய ஊழியர்களின் கண்களைத் திறக்கட்டும்.

**திருவாரூர் மாவட்டம் ஒக்கூர் என்ற இடத்தில் அமைந்துள்ள 1000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் தனியார் அனல் மின்நிலையத்தில் 1.7.2011 அன்று தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) சங்கம் துவக்கப்பட்டது. மாதம் ரூ. 2000/-வீதம் ஊதிய உயர்வும் சில சலுகைகளும் பெற்று சங்கமும், நிர்வாகமும் சமீபத்தில் செய்துக் கொண்ட ஒப்பந்த நகல்**

## MEMORANDUM OF SETTLEMENT

**Memorandum of settlement reached between the Management of M/s Nagai Power Private Limited, Okkur and the workmen of SVSD as per annexure represented by its union Central Organisation of Tamilnadu Electricity Employee, Nagai Circle.**

**Management represented by**

1. B. Radha Krishna VP (HR)
2. MYN Kishore VP (CA)

**Union represented by**

1. G. Ramakrishnan, Secretary
2. R. Ramanujam. Vice President
3. P. Sivagnanam
4. Y. Charles

**Short recital**

Union vide its letter dated 02.07.2012 has sunmitred a charter of demands seeking management to consider the same.

Negotiations were held between both the parties on different dated and an agreement is reached on 09.07.2012.

**Terms and conditions of the Settlement**

1. This settlement is applicable for the workers numbering 29 mentioned in the annexure attached herewith which is read as part of this settlement.
2. This agreement is for a period of one year from 01.06.2012 to 31.05.2013.
3. Management agreed to increase the wage of the workers from the present Rs. 5200 pm to Rs.7200 pm.
4. ESI will be covered as and when it is applicable.
5. Workers are already covered under Group Insurance Scheme.
6. Leaves will be given as per the provisions of Factories Act.
7. In settlement of the above the union has agreed that all their demands are dropped and they will not claim and raise any further demands during the course of operation of this settlement.
8. Union has agreed that the workers will abide by the rules and regulations of the company and will maintain proper discipline and will not involve in any violent manner and in case of any dispute they will explore the possibilities of negotiations and settlement.

**Both parties place on record their thanks for the guidance extended by Hon'ble MLA Shri Naagai Maali, in reaching this settlement.**

Signed on this 09th day of July 2012.

# ANNEXURE TO SETTLEMENT DATED 09.07.2012

| S.No. | Name | Father Name | Date of Joining |
|---|---|---|---|
| 1. | S. KAMARAJ | SRINIVASAN | 01.03.2011 |
| 2. | M.G. PAKKIRISAMY | GOPAL | 01.03.2011 |
| 3. | S. PRABU | SOUNDARARAJAN | 01.03.2011 |
| 4. | S. PANANIVEL | SELLIYAN | 01.03.2011 |
| 5. | R. RAJAN | RAMADASS | 01.03.2011 |
| 6. | S. SIVAGNANAM | PAKKIRISAMY | 01.03.2011 |
| 7. | M. SOUNDERAJAN | MUNIAN | 01.03.2011 |
| 8. | G. SEKAR | GOPAL | 01.03.2011 |
| 9. | P. GUNASEKARAN | PERIASAMY | 07.03.2011 |
| 10. | Y. AROKIASAMY | YAHOOP | 08.03.2011 |
| 11. | Y. CHARLESH | YAHOOP | 08.03.2011 |
| 12. | C. ANBALAGAN | CHINASAMY | 23.03.2011 |
| 13. | N. JOHN | NAGARAJ | 23.03.2011 |
| 14. | S. MURUGESAN | SUNDARAM | 02.05.2011 |
| 15. | P. JEEVANANTHAM | PERIASAMY | 02.05.2011 |
| 16. | G. RAMACHANDRAN | GOVINDASAMY | 02.05.2011 |
| 17. | A, GUNASEKARAN | ARUMUGAM | 02.05.2011 |
| 18. | M.T. PRABAKARAN | THANGASAMY | 02.05.2011 |
| 19. | G. MAHARAJAN | GOPAL | 02.05.2011 |
| 20. | N. GUNASEKARAN | NARAYANASAMY | 05.05.2011 |
| 21. | T. PRABAKARAN | THANGAYAN | 05.05.2011 |
| 22. | S. MURUGANANTHAM | SELVARAJ | 05.05.2011 |
| 23. | P. THANGARASU | PAKKIRI | 05.05.2011 |
| 24. | P. ASAITHAMBI | PAKKIRI | 07.05.2011 |
| 25. | M. GOVINDASAMY | MARIMUTHU | 12.05.2011 |
| 26. | K. RAMAYAN | KALIAPPAN | 12.05.2011 |
| 27. | M. SENTHAMILSELVAN | MANIYAM | 12.05.2011 |
| 28. | K. KALAIARASAN | KANNUSAMY | 12.05.2011 |
| 29. | K. SEKAR | KARUPAIYAN | 01.06.2011 |

**நிர்வாகம் சார்பில்**

(B Radha Krishna)

(MYN Kishore) 9/7/12

**தொழிற்சங்கம் சார்பில்**

( G Ramakrishnan)

(R. Ramanujam)

(P.Sivagnanam)

(Y Charles)

Signed before me

(Shri Naagai Maali)

Hon'ble MLA,Kilvelur

## இயற்கை எய்தும் தமிழக அரசு ஓய்வூதியர் குடும்பத்திற்கு வழங்கும் குடும்ப பாதுகாப்புத் தொகை ரூ.25000 லிருந்து ரூ. 35000./ ஆக உயர்த்தி வழங்கிய அரசு உத்தரவு

**FINANCE (PENSION) DEPARTMENT**

**G.O. No. 184, Dated 1st June 2012**

**(Vaikasi 19, Thiruvalluvar Aandu 2043)**

**PENSION - Tamil Nadu Government Pensioners' Family Security Fund Scheme - Enchancement of financial assitance from Rs.25,000/- to Rs. 35,000/- in the case of death of pensioners - Orders - Issued.**

**READ :**

1. G.O. Ms. No.762, Finance (Pension) Department, dated: 31.12.2996.
2. G.O. Ms. No.315, Finance (Pension) Department, dated: 12.06.1997.
3. G.O. Ms. No.413, Finance (PGC) Department. dated: 17.10.2001.
4. G.O. Ms. No.416, Finance(Pension) Department dated: 18.11.2010

**ORDER:**

In the Budget Speech for 2012-2013, announcement has been made by Government to enhance the financial assistance under the Tamil Nadu Government Pensioners' Family Security Fund Scheme from the present level of Rs.25.000/- ordered in the Government Order first read above to Rs. 35,000/- in the event of death of the pensioner, as a special gesture.

2. Accordingly, the Government direct that the financial assitance under the Tamil Nadu Government Pensioners' Family Security Fund Scheme shall be enhanced from Rs.25,000/- to Rs. 35,000/- in the event of death of the pensioners with effect from the date of issue of these orders.

3. There shall be no change in the existing rules and regulations governing the sanction of assistance under the Tamil Nadu Government Pensioners' Family Security Fund Scheme.

(BY ORDER OF THE GOVERNMENT)

**K. SHANMUGAM**

PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

### மணிப்பூர் மாநில மின் வாரியம் தனியார்மயமாக்கல்

மணிப்பூர் மாநில முதலமைச்சரும் மின் துறை அமைச்சருமான இபோபிசிங் மணிப்பூர் மின்சார வாரியத்தை கழகங்களாக பிரித்து உத்தரவு பிறப்பித்துள்ளார். மணிப்பூர் முதலமைச்சர் மாநில மக்களுக்கு மின்சாரத்தை தடையின்றி அளிப்பதற்கும் இம்பால் மாநகரமின் விநியோகத்தை தனியார் மயமாக்கப்படும் என்று குறிப்பிட்டு கூறி இருந்தார். இதற்கிடையில் மணிப்பூர் முதலமைச்சர் மத்திய எரிசக்தி துறை அமைச்சர் சுசில்குமார்சிண்டே அவர்களை டெல்லியில் சந்தித்து மின்வாரியம் கழகங்களாக பிரிக்கப்பட்டுள்ளதையும், கழகங்களாக பிரித்துள்ள மின் வாரிய பணியை ரிலையன்ஸ் போன்ற நன்கு அறிமுகமான தனியார் நிறுவனங்களிடம் அளிக்கப்பட உள்ளதாகவும் வாக்குறுதி அளித்து வந்துள்ளார்.

ஆசிரியரும், வெளியிடுபவரும் எஸ். எஸ். சுப்பிரமணியன், எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை-5,
போன் 2854 85 29. அச்சிட்டோர் பாட்டாளிகள் அச்சகம், பொரம்பூர், சென்னை 600 012. போன் 2663 37 71



# கேப்டன் லட்சுமி



ஆரிசன்

புரட்சியின் வேர்களிலிருந்து
புறப்பட்டது உனது ஜனனம்.
ராணுவத்தளங்களில்
புலிக்கூட்டதோடு
மான் கூட்டமும்
சேர்ந்து போராடும் என்பதை
புவிக்கு நிரூபித்த
புரட்சிப் புதல்வி நீ!

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக
இந்தியா
பேச்சுவார்த்தை நடத்திய
போதெல்லாம்
பெண்கள் ராணுவத்தின்
பீரங்கியாய்
நேதாஜியோடு ..... நீ
நிலைத்து நின்றாய் !

நீ
தேசம் வாழ
சிப்பாய்களின் தோட்டத்தில்
தோட்டாக்களை வெடிக்கக்
கற்றுக்கொண்டாய் !

தேசியக்கொடியில் இருக்கும்
சக்கரம்
இனி ...
பெண்களின் தியாகத்தை
சுதந்திர பூமிக்கு சொல்லித்தர
உனது பெயரில்
ஊர்வலம் வரவேண்டும்!

அழகுப் போட்டிகள்
பெண்களை அழுக்காக்கி
நாட்டை சூதாட்டத்துக்குள்
சிக்க வைத்து வலைபின்னும்
வயாகரா என்பதை
வீரத்தோடு சொன்னாய் !

பாரதப் போர் துவங்குகிறதோ
இல்லையோ
உலகப்போர் துவங்கலாம்
என்பதை சூட்சுமமாய்
சொல்லி வைத்தாய்.
அது நீருக்காகவும் இருக்கலாம்
பெண்களின்
கண்ணீருக்காவும் இருக்கலாம்.

இப்போதும் எப்போதும்
தெரிகிறது
உலகமய அழுக்கு !

நீ மருத்துவம் பார்த்தாய்
நோய் குணமானது.
உன் உடலை மருத்துவர்கள்
ஆராய்ச்சி செய்கிறார்கள் !

நீ போராளியாய்
எப்படி இருந்தாய் என்று
திசுக்களில் ஆராய்ச்சி
தீவிரமாய் நடக்கட்டும்.
பெண்கள் போராடலாம் என்று
புதிய உலகுக்கு அது சொல்லி
வைக்கட்டும்!

சேரநாடு
உன்னை பூமிக்குத் தந்தது.
சென்னை உன்னை
ஆயுள் முழுக்க
அவதானிக்க
மருத்துவச்சியாய்
மாற்றியமைத்தது.

வங்கம் உன்னை
வாரி அனைத்து,
செதுக்கிய யெடுத்து,
செம்மைப் படுத்தி
சமூக தளத்தில்
சரித்திர மாக்கியது !

கேப்டன் லட்சுமி
ராணுவம் வெடிக்கும்
போதெல்லாம்
உன் பெயரில் சுதந்திரம்
பூக்கட்டும் !
சமாதான சமத்துவப் பூக்கள்
உன் பாதங்களை நனைக்கட்டும்

தோழா !
தொடரும் எங்களின்
சமத்துவம் நோக்கிய
சரித்திரப் பயணத்தில்....
உன் நினைவிடத்தில்
கனத்த இதயத்தோடு
கடந்து செல்வோம்!